வருட சந்தா.

1 வருஷத்திற்கு 6—0—0

மலேயா 11—0—0

# ஆஸாத்

ஆசிரியர்கள்:-

ஹகீம் சகோதரர்கள்.

—(தமிழ் தேசீய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.)— விலை 2 அணா.

மலர் 1. | சர்வஜித்துஹு தைமீ 27உ 9—2—1948 ஹிஜிரி 1367 ரபியூலவ்வல்மீ 28உ திங்கட்கிழமை. | இதழ் 3

## கருமேகங்கள் சூழ்ந்த டில்லியில் நவரத்ன மாரி.

—மௌலானா ஆஸாத்.

அன்பர்களே!

எத்தகைய பிணைப்பு என்னை இங்கு கொண்டு வந்துள்ளது என்று நீங்கள் அறிவீர்களா? ஷாஹே ஜஹானுடைய ஞாபகச்சின்னமான இம்மசூதியில் இந்த கூட்டம் எனக்குப் புதிதல்ல. இரவு பகல்போன்ற பல மாறுபாடுகள் ஏற்பட்டிருந்த அந்தக் காலத்திலும் கூட இதே இடத்தில் உங்களை அழைத்திருந்தேன் அன்று உங்களுடைய முகத்தில் குழப்பத்திற்குப் பதில் அமைதியும், நெஞ்சத்தில் சந்தேகத்திற்குப்பதில் உறுதியும் குடிகொண்டிருந்தது. இன்று உங்களுடைய முகத்தின் அமைதியின்மையும், உள்ளத்தின் அவநம்பிக்கையும் நோக்கும்பொழுது என்னை அறியாமலே கடந்த சில வருஷங்களின் மறந்துபோன சம்பவங்கள் நினைவுக்கு வருகின்றன, நீங்களும் மறந்திருக்க முடியாது. உங்களை அழைத்தேன். நீங்கள் என் நாவை நறுக்கினீர்கள். பேனாவை எடுத்தேன். என் கையை துண்டித்தீர்கள். நடக்க எழுந்தேன். என் கால்களை வெட்டினீர்கள். பிறள முயன்றேன். என் இடுப்பை முறித்தீகள். எனினும் இன்று பிரிவாற்றுமையின் வேதனை உங்களுக்கு அளித்து சென்றிருக்கும் கசப்பு அரசியல் பொலிவுடன் இருந்த கடந்த ஏழு வருஷங்களிலும்கூட உங்களை அபாயத்தின் ஒவ்வொரு அம்சத்தைக் குறித்தும் எச்சரிக்காமல் நான் இருந்துவிடவில்லை. ஆனால் என்னுடைய குரல் உதாசீனம் செய்யப்பட்டதுமன்றி அலட்சியம், அசிரத்தையுடன் எல்லாத் துறைகளிலும் மறுத்தீர்கள். பலன் தெரிந்துவிட்டது. எந்த அபாயங்களைப் பற்றிய சந்தேகங்கள் உங்களை நேரான வழியை விட்டு வெகு தூரம் கொண்டு சென்றனவோ அதே அபாயங்கள் இன்று உங்களை சூழ்ந்துகொண்டு விட்டன.

எட்டாக்குரல்.

உண்மையைச்சொல்ல வேண்டுமாயின் நான் ஸ்தம்பித்திருந்த அல்லது தொலைவில் எழுந்ததொரு எட்டாக்குரலாகவே இருந்தேன். தேசத்தில் இருந்தும்கூட பரதேசியைப்போல் வாழ்க்கையைக் கழித்தேன். ஆயினும் நான் மேற்கொண்ட நிலையில் முதல் நாளே என்னுடைய இறகுகள் வெட்டப்பட்டு என் கூடு அமைய இங்கு இடமிருக்கவில்லை என்பது அர்த்தமல்ல. இருப்பினும் உங்களுடைய அத்துமீறிய செய்கைகளினால் நான் குறை கூறவேண்டியிருக்கிறது. என் உணர்ச்சி காயமுற்று உள்ளம் துன்புற்று இருக்கிறது. நீங்கள் எந்தவழியை மேற்கொண்டீர்கள்? எங்கு போய் சேர்ந்தீர்கள்? இன்று எங்கு நிற்கின்றீர்கள்? என்று சிந்தித்துப் பாருங்கள். இது அமைதியற்ற வாழ்க்கையல்லவா? உங்கள் புலன்களில் தடுமாற்றமில்லையா? இந்த அமைதியின்மை நீங்களே தேடிக்கொண்டிருக்கிறீர்கள். இவை உங்கள் செய்கைகளின் பலனேயாகும். பயம், சமுதாயங்களின் வாழ்க்கைக்கு மரண நோய். அதை விட்டொழியுங்கள். நீங்கள்நம்பியிருக்கும்இந்தத்தூண்கள் விரைவில் முறிந்துகொண்டிருக்கின்றன என்று சமீபத்தில் சொல்லியிருந்தேன். நாட்கள் கழிந்து விடவில்லை நீங்கள் கேட்டதும், கேட்காததும் ஒன்றுக்கிவிட்டீர்கள். காலமும் அதன் ஓட்டமும் உங்களுக்காக என்று தன் போக்கை மாற்றிக்கொள்ள முடியாது என்பதை நீங்கள் சிந்திக்கவில்லை. கால வேகம் தணியவில்லை. நீங்கள் நம்பிக்கை வைத்த அந்த ஆதரவு உங்களை ஆதியற்றவர்கள் என்றெண்ணி விதியிடம் ஒப்புவித்துச் சென்றுவிட்டதை நீங்கள் பிரத்தியக்ஷமாய் பார்க்கின்றீர்கள். உங்கள் அறிவு அகராதியில், விதி தெய்வ சங்கல்பத்துக்கு முரண்

பட்ட ஆ... ம் கொண்டதாகும். அதாவது உங்களிடம் பொதுவாக முயற்சியின்மையின் மற்ெருரு பெயர்தான் விதி என்பது.

**விரிப்பு சுருண்டது:—**

உங்கள் விருப்பத்திற்கு நேர்மாறுக ஆங்கில விரிப்பு சுருட்டப்பட்டுவிட்டது. வழிகாட்டிகளாக நீங்களே செதுக்கிய பொம்மைகளும் உங்களை மோசம் செய்துவிட்டன. உண்மையில் இந்த விரிப்பு எப்பொழுதுமே விரிக்கப் பட்டிருக்குமென்றும் அதே பொம்மைகளின் பூஜையிலேயே வாழ்க்கை அடங்கியுள்ளது என்றும் நீங்கள் நினைத்திருந்தீர்கள் உங்கள் புண்ணில் கோலிட நான் விரும்பவில்லை. உங்கள் அமைதியின்மையை மேலும் அதிகரிப்பது என் விருப்பமும் அல்ல. ஆயினும் கடந்த காலத்தை சிந்திப்பதனல் பல சிக்கல்கள் தீர்ந்துவிட முடியும்.

"நடக்கவேண்டியதை எந்த சமூகமும் தங்கள் துர்ப்பாக்கியத்தால் தடுத்து நிறுத்திவிடமுடியாது. இந்திய விதியிலும் அரசியல் புரட்சி எழுதப்பட்டுவிட்டது. இருபதாவது நூற்றுண்டின் சுதந்திர சூராவளியால் அதன் அடிமைத்தளைகள் அறுந்துவிழப் போகின்றன. காலப்போக்குடன் தோளோடு தோள் சேர்ந்து முன்னேருமல் தயங்கி நின்று தற்கால போக்கையே உங்கள் கொள்கையாக வைத்துக் கொண்டிருந்தால் வருங்கால சரித்திர ஆசிரியன்" ஏழு கோடி மக்களைக் கொண்டிருந்த உங்கள் கூட்டம் தேச சுதந்திரம் சம்மந்தப்பட்டவரை அனுசரித்த போக்கு உலக படலத்திலிருந்து மறைந்துபோகும் ஜாதியாரின் போக்காகவே இருந்தது" என்றே எழுதுவான்"

இந்திய சுதந்திர உணர்ச்சி உங்களுக்கு ஊட்டுகையில் உங்களை அழைத்து 191?-லேயே இவ்விதம் சொல்லியிருந்தேன்.

இன்று இந்தியா சுதந்திரம் அடைந்திருக்கின்றது அதோ முன்னல் இருக்கும் செங்கோட்டையின் மதில்மேல் சுதந்திர இந்தியக்கொடி தனக்குரிய பூரண கம்பீரத்துடன் பறந்துகொண்டிருப்பதை நீங்கள் பார்க்கின்றீர்கள். அதிகார வர்க்க மமதை, மனம் நோக கேலி செய்து சிரித்த அதே கொடிதான் இந்தக்கொடி.

**கால மாறுதல்:—**

உங்கள் ஆசைகளுக்குகந்த வகையில் காலம் மாறுதல் அடையவில்லை என்பது உண்மைதான். ஆயினும் ஒரு சமுதாயத்தின் உரிமைகளை கௌரவிக்கும் முறையிலேயே மாறுதல் அடைந்துள்ளது. புரட்சியின் குறிப்பிடத்தக்க இத்தன்மை உங்களை பெரும் அளவு பீதியுறச் செய்துவிட்டது. நல்ல பொருள் பறிக்கப்பட்டு அதற்குப் பதில் கெட்ட தொன்று வந்திருப்பதாக நினைக்கின்றீர்கள். உண்மை அதுவல்ல. அது உங்கள் சந்தேகமேயாகும். கெட்டது போய் நல்லது வந்திருக்கிறது என்பதுதான் உண்மை. நீங்கள் நல்ல பொருளுக்காக உங்களை தயார்படுத்திக்கொண்டிருக்கவில்லை என்பதுதான் உங்கள் அதிருப்திக்கு காரணம். கெட்டதை விமோசனமளிக்கக்கூடியதாக எண்ணி வந்தீர்கள். கெட்டது என்று நான் அன்னிய அடிமையையே குறிப்பிடுகிறேன். நீண்டகாலம் அதிகாரப் பேராசையின் கைப்பொம்மைகளாய் வாழ்ந்திருக்கிறீர்கள்

ஏதோ ஒருபோராட்டம்ஆரம்பிப்பதற்கு நீங்கள் ஆயத்தம் செய்த நாளும் ஒன்று உண்டு. அந்தப் போராட்டமுடிவினல் அமைதியிழந்து விட்டிருக்கின்றீர்கள். அங்கு பிரயாணத்தின் வழி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை. அதற்குள்ளேயே தவருன பாதையின் ஆபத்தும் வந்து சேர்ந்திருக்கிறது.

**இதுவா ஹிஜ்ரத்?**

அடிக்கடி சொல்லிவந்திருப்பதையே மீண்டும் இன்று செல்லவிரும்புகிறேன் சந்தேகம், தவருன போக்கு, குழப்பம் மூன்றையும் விட்டுவிடுங்கள். இந்த மூன்று கூறுள்ள அபூர்வ வாள் இரண்டு கூறு தீட்டிய இரும்பு கட்டாரியைவிட கூர்மையுள்ளதாகும். ஹிஜ்ரத் (நாட்டின் சுதந்திரத்திற்கு பாடுபட நாட்டைவிட்டு வெளியேறுவது ஹிஜ்ரத்) தின் புனிதப் பெயரால் நீங்கள் மேற்கொண்டுள்ள விட்டு ஓடும் வாழ்க்கை சிந்திப்பீர்களானல் சரியல்ல என்பது தெரியும் மன உறுதிகொள்ளுங்கள். அறிவை சிந்தனையில் பழக்கப்படுத்துங்கள். உங்கள் முடிவு எவ்வளவு அவசரப்பட்ட செய்கை என்பதை உணரமுடியும் எங்கே போகின்றீர்கள்? ஏன் போகின்றீர்கள்? அதோ! பாருங்கள். மசூதியின் ஸ்தூபிகள் குனிந்து சரித்திர ஏடுகளை எங்கு இழந்துவிட்டீர்கள்! என்று உங்களிடம் கேட்கின்றன.

நேற்றைய பேச்சுதான்! சமீபகாலத்தில் உங்களுடைய மூதாதையர் வந்து யமுனையில் முகங்கழுவினர். இன்று உங்கள் நிலை என்ன! இங்கு இருந்து வரவும் பயப்படுகின்றீர்கள். உண்மையில் டில்லி உங்கள் உழைப்பால் வளம் பெற்றிருக்கிறது

அன்பர்களே! உங்களுக்குள் அடிப்படையான தொரு மாறுதல் உண்டாக்கிக்கொள்ளுங்கள். உங்கள் கடந்தகால ஆர்வம், ஆவேசம் தவருனதாக இருந்தது. அதைப்போலவே இன்று பயம், அவநம்பிக்கையும் ஏற்பட்டிருக்கிறது. முஸல்மானும், பயங்கொள்ளித்தனமும், அல்லது முஸல்மானும், கலகமும்

ஒன்றுசேர முடியாது. உண்மை முஸ்லிமுக்கு ஆசை, அசைக்கவோ, பயம் பயமுறுத்தவோ முடியாது. சில மனிதர்களின் முகங்கள் மறைந்துவிட்டதால் பயப்பட வேண்டாம். அவர்கள் விட்டுப்போவதற்காகவே உங்களைத் திரட்டினார்கள். இன்று அவர்கள் கையை விடுவித்துக்கொண்டு போய்விட்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. உங்களுடைய மனமும் அவர்களுடன் சென்றுவிடாமல் இருக்கிறதா என்பதை மட்டும் பார்த்துக்கொள்ளுங்கள். இன்னும் மனம் உங்களிடமே இருக்குமானால் அதை கடவுளின் ஒளி நிறைந்த இடமாக மாற்றுங்கள். பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன் கடவுள், நபியவர்களின்மூலமாக நமக்கு அறிவித்துவிட்டார். "அல்லாஹ் நம் ரக்ஷகன் என்று சொல்லி அதில் உறுதி கொண்டுள்ளவர்களுக்கு பிறகு எவ்வித பயமும் இல்லை; எவ்வித துக்கமும் இல்லை."

சண்டமாருதங்கள் வருகின்றன. ஓய்ந்தும் போகின்றன. இது அனல்காற்றாக இருக்கலாம். ஆயினும் இதற்கு நீண்ட ஆயுள் ஒன்றும் கிடையாது. பார்த்துக்கொண்டிருக்கையிலேயே இந்தத் துன்பப் பருவமும் கழிந்தே போகும். எப்பொழுதுமே இன்னிலையில் இருக்காதவர்களைப்போல் நீங்கள் மாறுதல் அடையவேண்டும்.

### ஓரே ஒரு குறை.

திருப்பித் திருப்பி பேசும் வழக்கம் எனக்கு இல்லை. ஆனாலும் உங்கள் கடந்தகால அலட்சியத்தை உத்தேசித்து நான் திருப்பித்திருப்பி சொல்லவேண்டியிருக்கிறது. மூன்றாவது சக்தி தன்னுடைய மமதையின் கூடாரத்தை சுருட்டிக்கொண்டு விடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நடக்கவேண்டியது நடந்தேறி இருக்கிறது. அரசியல் மனப்பான்மை தன் பழைய அச்சு உடைத்தெறிந்துவிட்டது. புதிய அரசியல் அச்சு வார்க்கப்படுகிறது. இன்னும் உங்கள் மனோபாவம் மாறவில்லை, புத்தி தடுமாற்றம் நிற்கவில்லை, என்றால் அந்த நிலைமையே வேறு. ஆனால் உண்மையான மாறுதல் அடைய உங்கள் மனதில் ஆசை ஏற்பட்டிருப்பது வாஸ்தவமானால் சரித்திரம் தன்னையே மாற்றிக்கொண்டதைப்போல் நீங்களும் உங்களையே மாற்றிக்கொள்ளுங்கள். இன்றைக்கும் நாம் புரட்சியின் ஒரு கட்டத்தையே பூர்த்தி செய்திருக்கிறோம். நம் நாட்டு சரித்திரத்தில் இன்னும் சில ஏடுகள் பாக்கியிருக்கின்றன. தயாராக இருந்தால் அதில் எழுதப்படுவதை நீங்கள் அலங்கரிக்க முடியும்.

### சூரிய கிரணங்களைப் பெறுங்கள்.

அன்பர்களே! மாறுதல்களுடன் சேர்ந்து முன்னேறுங்கள். நாம் அதற்குத் தயாராக இருக்கவில்லையே என்று சொல்லவேண்ட[illegible] அப்படி என்றால் இப்பொழுது அதற்குத் தயா[illegible]ய்விடுங்கள். நட்சத்திரங்கள் உதிர்ந்துவிட்டன. இரவு நீங்கிவிட்டது ஆயினும் சூரியன் பிரகாசித்துக்கொண்டிருக்கிறான். அதன் கிரணங்களை வாங்கிக்கொள்ளுங்கள் இருள் நிறைந்த பாதையில் பாய்ச்சுங்கள். அங்கு வெளிச்சம் அவசியம்.

அதிகார வர்க்கப் பள்ளிக்கூடத்தில் விசுவாச அத்தாட்சி பத்திரம் பெற நான் உங்களுக்கு சொல்லவில்லை. அன்னிய அதிகாரவர்க்க ஆட்சியில் நீங்கள் அனுசரித்த கை ஏந்தும் வாழ்க்கையையே மேற்கொள்ளும்படியும் நான் சொல்லவில்லை. இதோ! வெண்மை நிறமுள்ள சித்திர வேலைப்பாடுகள் இந்தியாவின் கடந்தகால ஞாபகச் சின்னங்கள். இது உங்கள் மூதாதையர் கொண்டுவந்ததாகும். அதை மறக்க வேண்டாம். அவைகளை விடவும் வேண்டாம். அவைகளின் வாரிசாக இருங்கள். நீங்கள் ஓடத் தயாராக இல்லையேல் உங்களை விரட்ட எந்த சக்தியாலும் முடியாது என்று நம்புங்கள். வாருங்கள். உறுதி கூறுங்கள் இந்த தேசம் நம்முடையது. தேசத்திற்காக நாம் இருக்கிறோம். இதன் விதியை நிர்ணயிக்கும் அடிப்படை விதிகளில் நம்முடைய குரலும் பிரதிபலிக்காவிட்டால் அது அரை குறையாகவே இருந்துவிடும்.

இன்று பூகம்பத்தைக் கண்டு நடுங்குகிறீர்கள். ஒரு காலத்தில் நீங்களே பூகம்பமாக இருந்தீர்கள். இன்று இருளை கண்டு தயங்குகிறீர்கள். நீங்களே ஒரு சமயம் பிரகாசித்திருக்கிறீர்கள். இன்று நீங்கள் மழை ஜலத்தில் நனைந்துவிடுமென்ற பயத்தால் பஜாமாவைத் தாங்குகின்றீர்கள். உங்களுடைய மூதாதையர் சமுத்திரங்களிலே குதித்தனர். மலைகளைத் தகர்த்தனர் அவர்களை சமீபித்தவுடன் இடிகள் புன்னகை பூத்தன. மேகங்களின் கர்ஜனைக்கு அவர்கள் சிரிப்பு பதிலளித்தது அனல் காற்றுகளின் திசையை மாற்றினார்கள் சூறாவளிகள் அடித்த போது "உங்கள் வழி இப் பக்கமல்ல" என்று எச்சரித்தார்கள். சக்ரவர்த்திகளின் முந்தானையில் விளையாடியவர்கள் இன்று தங்கள் கிழிந்த முந்தானைக் கந்தைகளை விற்றுத் திரிவது ஈமானின் பலஹீனமேயாகும் ஒருநாளும் ஈமான் கொள்ளாத அளவுக்கு கடவுளை மறந்துவிட்டார்கள்.

அன்பர்களே! உங்களுக்காக புதுமுறை ஒன்றும் என்னிடமில்லை பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னுள்ள பழைய முறையே என்னிடம் இருக்கிறது. மனித வர்க்கத்தின் மிகப்பெரிய உபகாரி கொண்டு வந்த முறை குர் ஆன் நமக்கு அளிக்கும் உறுதி அது.

(4ம் பக்கம் பார்க்க)

# "ஆஸாத்"

தமிழ் தேசியப் பத்திரிகை.

மலர் 1 } 9—2—48 திங்கட்கிழமை { இதழ் 3


## விஷம் அமிர்தமாகுமா.

வகுப்புவாதத்துக்கு ஹிந்து, முஸ்லிம், சீக்கியன் என்ற மத வித்தியாசமோ பாகிஸ்தான் ஹிந்துஸ்தான் என்ற எல்லைக் கட்டுப்பாடோ கிடையாது. ஒரு மதத்தினரின் வகுப்புவாதத்தை விஷமென்றும் இன்னொரு மதத்தினரின் வகுப்புவாதம் அமிர்தம் என்றும் இல்லை. எம்மதத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் வகுப்புவாதிகள் சமுதாயத் துரோகிகள் என்பதில் சந்தேகமே இல்லை. பொதுவாக மக்கள் அவர்களை கண்டித்தே ஆகவேண்டும். சகல மதத்தினரும் சேர்ந்து வகுப்புவாத விஷமம் தலைதூக்காமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டியது கடமை. அது ஒரு தொத்து நோய். எல்லோரையும் பாதிக்கலாம். அதனால் சமுதாயமே பாதிக்கப்படலாம். மத, பூகோள அடிப்படையில் அதை பிரிக்கமுடியாது. பாகிஸ்தானுக்கு நன்மையும் இந்தியாவுக்கு தீமையும் செய்யக்கூடிய வகுப்புவாதம் ஒன்றுமில்லை. எவ்விடத்திலும் எச்சமயத்திலும் விஷம் விஷமே. அது அமிர்தமாகிவிடமுடியாது. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் நல்லவர்களாக இருக்கலாம். நல்லவர்களின் வகுப்புவாதமும் நல்லதாகவே இருக்கும் என்பதில் அர்த்தமில்லை. நல்லவர்கள் என்று மனிதர்களை குறிக்கின்றோமே ஒழிய வகுப்புவாதத்தை அல்ல.

வகுப்புவாதம் ஹிந்துவுமல்ல, முஸ்லிமுமல்ல. இருவருக்கும் பொதுவான எதிரியே ஆகும். உள்ளத்திலே வளரும் இந்தக் கொடிய சர்ப்பம் முதலில் வளர்த்தவனை தீண்டியே பிறகு அது மற்றவர்களை தீண்டுகிறது. எனவே எல்லா மதத்தினரும் சேர்ந்து அதை ஒழித்துக் கட்டவேண்டும்.

முஸ்லிம் என்பதற்காக மிஸ்டர் ஜின்னாவின் வகுப்புவாதத்தையும் ஹிந்து என்பதற்காக தர்ப்பங்கா மஹாராஜாவின் வகுப்புவாதத்தையும் கண்டிக்காமல் விடும் முஸ்லிம்களும் ஹிந்துக்களும் வகுப்புவாதிகளே ஆவர். இன்று வகுப்புவாத சுழலிலிருந்து நம் சர்க்காரை காப்பாற்றவேண்டியது இந்தியர்களாகிய நம் அனைவரின் கடமையாகும். கடமையை செய்யும்பொழுது முஸ்லிம்கள் முஸ்லிம்களுக்கும், ஹிந்துக்கள் ஹிந்துக்களுக்கும், சீக்கியர்கள் சீக்கியர்களுக்கும் சலுகை காட்டமுடியாது. நாம் என்றுமே முஸ்லிம் லீகின் வகுப்புவாதத்தை கண்டிக்காமல் இருந்ததில்லை. ஹிந்து மகாசபை ராஷ்ட்ரீய சுயம் சேவக் சங்கத்தின் வகுப்புவாதத்தையும் நாம் கண்டிக்காமல் இருக்கமுடியாது.

பல சமூகங்கள் அடங்கிய இந்திய சமுதாயத்தில் ஒன்றைக் கண்டித்து இன்னொன்றை கண்டிக்காமல் விட்டால் நாம் கடமை செய்தவர்களாகமுடியாது. ஏககாலத்தில் இரண்டு படகுகளில் சவாரி செய்யும் கொள்கை அபாயத்தையே விளைவிக்கும். நிர்ணயிக்கப்பட்ட ஒரு கொள்கையை நாம் ஏற்றுக்கொண்ட பிறகு ஹிந்து, முஸ்லிம்களுக்காக அதை விட்டுக் கொடுக்க முடியாது.

ராஷ்ட்ரீய சுயம் சேவக் சங்கம் சட்ட விரோதமானது என்று பிரகடனம் செய்திருக்கும் இந்திய சர்க்காரும், மாகாண சர்க்கார்களும் எல்லா வகுப்புவாதஸ்தாபனங்களையும் சட்ட விரோதமானவை என்று பிரகடனம் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

"சோம்பேரிகளாக இருக்கவேண்டாம்; சோர்வடையவேண்டாம் உண்மையான ஈமானுள்ளவர்களாக இருப்பீர்களானால் நீங்கள் மேலான நிலையை அடைவீர்கள்.

இன்று சுருக்கமாக சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டேன். மீண்டும் சொல்லுகிறேன் நிதானத்தை இழக்காதீர்கள். உங்களை சுற்றியே உங்கள் வாழ்க்கையை நீங்களே உருவாக்குங்கள். வாங்கிக் கொடுப்பதற்கு இது மண்டிச் சரக்கல்ல. இது உள்ளக் கடையிலிருந்து சத்தியமுள்ள வினைப் பயனை விலையாகக் கொடுத்தாலே கைக்கு எட்டும்.

# இந்திய முஸ்லிம்களுக்கு வேண்டுகோள்.

## ஆசிரியப்பா.

1 இந்திய முஸ்லிம் என்னரும் சோதரீர் !
இன்றும் என்றும் இந்திய நாடே
இன்பந் தரும் நம் எழிற்ருய் நாடு
இதையறி யாது இந்நாள் ளோரும்
எவரெவர் கூற்றையோ ஏற்று லீகினில்
ஈடுபட் டுழைத்தனர் 'இரு சமு தாயம்'
எனவெடுத் தோதி இந்திய நாட்டை
இரண்டாய் ஆக்கினர் என்ன கண்டனர் ?
2 நாலரைக் கோடி நம்மவ ரிந்த
நட்டாற் றில் விடப் பட்டவர் போன்று
நலனெலா மிழந்து நைந்துரு தகின்றார்!
கலமிழந் தவரென கதிகலங் குகின்றார்!
3. ஜின்னு வியாகத் என்னசெய் கின்றார்?
இந்நாள் காந்தி ஏன்சுடப் பட்டார்!
இந்திய முஸ்லிம் இனத்தா ரெய்திய
இடர்களை நீக்க இருமுறை பட்டினி
இருந்து வெற்றி ஏற்றதா லன்றே!
ஈதெல்லாம் சற்று எண்ணிப் பார்ப்பீர்!
இனிமுத லேனும் இந்தியர் தந்தை,
இணையிலா மஹாத்மா எம்மஹான் காந்தி
இன்சொல் செயல்களை இதயம் கொள்வீர்
4. இனி முஸ் லிம்லீக் இங்கே வேண்டாம்
தனிநாடு கண்ட தன்மை யும்போதும்
தனி இனக் கொள்கையை தவிர்த்து ஒழிப்பீர்!
தகைநிறை ஆஸாத் தலைமையை ஏற்பீர்!
5. 'இந்தியர் எவர்க்கும் இந்தியா சொந்தம்
இந்தியர் ஓரினம்' எனஉரைத் துழைக்கும்
இந்தியக் காங்கிரஸ் இணையிலா மாசபை
'இத்தியர் பொதுசபை' எனமனங் கொண்டு
இன்றே சேர்வீர்! இந்நா டுயர
இயற்றுவீர் தொண்டு! இன்பம் ஓங்குமே!

K. M. ஷேக் பீர் முஹம்மது,
கல்லிடைக்குறிச்சி.

---

லக்னோ,
26—1—1948.

ஐக்கிய மாகாண சட்டசபை இடைத்தேர்தலில் காங்கிரஸ் சார்பில் அபேசட்கர்களாய் நின்ற மூன்று காங்கிரஸ் முஸ்லிம்களும் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களுக்கு எதிராக போட்டி போட்ட மூன்று லீக் அபேட்சகர்களும் தங்கள் அபேட்சா பத்திரங்களை வாபஸ் வாங்கிக் கொண்டனர்.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பெயர்கள் வருமாறு:—

1. லக்னோ முஸ்லிம் தொகுதி:— மிஸ்டர் முஸப்பர் ஹுசேன் ஐக்கிய மாகாண காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி.

2 பஸ்தி முஸ்லிம் தொகுதி:— மிஸ்டர் அப்துல் ஹக்கீம், ஐக்கிய மாகாண சட்டசபையின் மாஜி டிப்டி ஸ்பீகர்.

3. அலிகார் முஸ்லிம் தொகுதி.—காஜா அப்துல் மஜீது மாஜி அகில இந்திய முஸ்லிம் மஜ்லிஸ் தலைவர்.

இந்திய முஸல்மான்கள் லீகுக்கு தலைமுழுக்கு போட்டு விட்டனர் என்பதற்கு இதுஒன்றே போதிய அத்தாட்க்ஷியாகும்.

# —: கடிதங்கள். :—

கும்பகோணம் 5—2—48

இன்று மாலை 6 மணிக்கு இவ்வூர் கமலாநேரு வாசகசாலை கட்டடத்தில் காந்திய ஸோஷியலிஸ்டு ஊழியர் கழக சார்பில் மஹாத்மாஜியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்க பொதுக் கூட்டம் ஒன்று நடந்தது. S. பாலசுந்திரம் பிள்ளை தலைமை வகித்தார். அடியிற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது ;—

பாரதத்தாயின் தவப்புதல்வர், அஹிம்சாமூர்த்தி, அண்ணல், மஹாத்மாஜியின் மறைவு குறித்து இக்கூட்டம் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்கு பிரார்த்திக்கின்றது. அன்னாரின் லட்சியங்களான கதர், தீண்டாமை, ஹிந்து, முஸ்லிம் ஒற்றுமை நிறைவேற உறுதியுடன் உழைப்பதாக இக்கூட்டம் பிரதிக்ஞை எடுத்துக் கொள்கிறது.

M. அப்துல் சத்தார்,
காரியதரிசி.

○ ○ ○

மேலப்பாளையம் 2—1—48

மேலப்பாளையம் நகர காங்கிரஸ் கமிட்டி தலைவரும் பிரபல காங்கிரஸ் முஸ்லிம் பிரமுகருமான V.S.T.முகம்மது இபுருஹீம் சாஹிப் இந்திய பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுக்கு கீழ்க்கண்ட தந்தி அனுப்பியுள்ளார்.

"உலக மக்களின் உள்ளங்களில் தன் ஒழுக்கம் மிகுந்த செய்கைகளால் அமைதி, சகிப்புத்தன்மைக்கு வித்திட்ட நம் ஆத்மீகத் தந்தை மகாத்மா காந்திஜி மறைவுக்கு ஆழ்ந்த வருத்தத்தையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் தியாகம் ஸ்வர்க்க சுகங்களை அனுபவிக்க கதவை திறந்துவிட்டது என்று நாம் பூரணமாக நம்புகிறோம். தங்களுக்கும், உத்தமரின் குடும்பத்தாருக்கும் மனோதிடம் ஆண்டவன் அளிப்பானாக."

விசுவாசமுள்ள பிரஜை
V. S. T. முஹம்மது இபுருஹீம்,
பிரஸிடெண்டு
டவுன் காங்கிரஸ் கமிட்டி,
மேலப்பாளையம்.
திருநெல்வேலி ஜில்லா.
தென்னிந்தியா.

Copy to
சர்தார் வல்லபாய் படேல்
மௌலானா அபுல் கலாம் ஆஸாத்
ராம்தாஸ் காந்திஜி
யுனைடெட் பிரஸ்

● ● ●

பாலக்காடு, 3—2—48.

நமது மகாத்மாஜீ நம்மை விட்டுப்பிரிந்துவிட்டார். அவர் பிரிவு எவ்வளவு தூரம் நம்மைக் கலங்க வைத்திருக்கிறதென்று எழுதமுடியாது. அவருடைய கொள்கையைப் பின்பற்றி நடப்பதுதான் நாம் செய்ய வேண்டிய கடமை. அப்படி நடக்க நான் பிரதிக்ஞை செய்கிறேன். அவருடைய ஆத்மா சாந்தி பெறட்டும்.

நண்பன்,
எம். சுலைமான்.

மேலப்பாளையம், 31—1—1948.

மஹாத்மா மறைந்த செய்தி கேட்டு இங்குள்ளோர் அனைவரும் திடுக்கிட்டனர். டவுன் காங்கிரஸ் கமிட்டி விடுத்த அறிக்கையை ஒட்டி ஹிந்து, முஸ்லிம்கள் கடைகள் அடைத்து பிரம்மாண்டமான மௌன ஊர்வலம் நடத்தி ஹிந்துக்கள் நதிக்கரையிலும் முஸ்லிம்கள் மசூதிகளிலும் பிரார்த்தனை நடத்தினர்கள்

ஹாமீம்புரம் வ செ. த த முஸ்தகீம் மசூதியில் பெரும் திரளாக முஸ்லிம்கள்கூடி மஹாத்மாஜீயின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை நடத்தினர்கள்.

M. K. காதர்மொஹிதீன்,
காரியதரிசி.

## அன்பர்களுக்கு எமது நன்றி

பொதுவாக ஆஸாத் உதவியாளர்கள் அனைவருக்கும், பாமர முஸ்லிம்கள் துஷ்பிரசார இருளில் அகப்பட்டுக்கொண்டிருந்த அக்காலத்திலிருந்து இன்று வரை எல்லா துறைகளிலும காங்கிரஸ் முஸ்லிம்களுக்கு பின் பலமாய் இருந்து ஊக்கமளித்து வந்திருக்கும் சென்னை பிரமுகர் ஜனப் ஹாஜி M. அப்துல் ரஹமான் சாஹிப் அவர்களுக்கு குறிப்பாகவும் நன்றி செலுத்தாமல் இருக்க முடியாது.

ஆஸாதுக்கு அன்பர்கள் அனுப்பியுள்ள ஏராளமான ஆசிச் செய்திகளுக்கு தனித்தனியாக நன்றியறிவிக்க முடியாததால் அன்பர்கள் அனைவருக்கும் மனப்பூர்வமான நன்றியை தெரிவிப்பதுடன் என்றுமே "ஆஸாத்" வளர்ச்சிக்கு ஒத்துழைக்கும்படி வேண்டுகின்றோம்.

மானேஜர்.

"ஆஸாத்"
(தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.)

உங்கள் ஊரில் ஏஜண்டிடம் கேளுங்கள். உங்கள் ஊரில் "ஆஸாத்" ஏஜென்ஸி இல்லாமல் இருந்தால் ஏஜென்ஸி எடுக்கும்படி அவருக்கு யோசனை கூறுங்கள். இது உங்கள் தேசியக் கடமை, "ஆஸாத்" சந்தாதாரர்களாக ரூ 6. (ஆறு) மணியார்டர் மூலம் அனுப்பி உடனே பதிவு செய்து கொள்ளுங்கள்.

மேனேஜர்
"ஆஸாத்"

# முஸ்லிம்களைத் தாக்குவது சர்க்காரைத் தாக்குவதாகும்.

(ராம் மனோஹர் லோஹியா)

யுனைடெட் பிரஸ் நிருபர் டாக்டர் ராம் மனோஹர் லோஹியாவை பேட்டிகண்டு, பம்பாய் மாகாண காங்கிரஸ் கமிட்டியிலிருந்து சோஷியலிஸ்டுகள் வெளியேற்றப்பட்டதன் பதில் நடவடிக்கை என்னவாக இருக்கும் என்று கேட்டதற்கு பதிலளிக்கையில், 'சோஷியலிஸ்டுகள் அனைவரும் காங்கிரஸிலிருந்து வெளியேற அதை ஒரு காரணமாகக் கொள்ள முடியும்'' என்றார்.

மேலும் அவர் ''ஆக்ரமிக்கும் நோக்கத்துடன் நாம் காங்கிரஸில் இருக்கவில்லை குறைகளைப் போக்கி காங்கிரசை பலப்படுத்தவே விரும்புகிறோம். செல்வாக்கு பெற்றிருப்பவர்கள் அப்படிச் செய்ய நம்மை அனுமதிப்பதில்லை''

காங்கிரஸிலிருந்து விலகிய பிறகு சோஷியலிஸ்டுகளின் வேலைத்திட்டம் என்ன என்று நிருபர் கேட்டதற்கு, ''நாம் எதிர்ப்பு சக்தியாக இருப்போம். அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக காங்கிரஸின் தற்காலப் போக்கை நாம் கண்டிக்கவில்லை. காங்கிரஸின் குறைகளைப் போக்கி சுயநலத்தை ஒழித்துக்கட்டி நாட்டை வறுமையிலிருந்து மீட்கவேண்டும் அதாவது நாம் புனர்நிர்மாணம் செய்யும் எதிர்ப்புசக்தியாக இருந்து உழைப்போம்''

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ஜனனவிழாவை யொட்டி பஞ்சாப் மாணவர் காங்கிரஸ் சார்பில் நடந்ததொரு கூட்டத்தில் டாக்டர் ராம் மனோஹர் லோஹியா கூறியதாவது ''நான் இரண்டு அல்லது மூன்று விஷயங்களைத்தான் சொல்லுவேன்.

முதலாவதாக மதத்தின் பெயரால் ஏற்படுத்தப் பட்டிருக்கும் பாகிஸ்தானை ஒழித்துக்கட்டியாக வேண்டும்.

இரண்டாவதாக இந்திய முஸல்மான்களுக்கு பூரணபாதுகாப்பு அளிப்பதுடன் இந்தியாவிலுள்ள ஹிந்து சீக்கியர்களுக்குள்ள எல்லா உரிமைகளும் அவர்களுக்கும் இருக்கவேண்டும்.

''இன்று டில்லி பத்திரிகை ஒன்று ''Dr. ராம் மனோஹர்லோஹியா பாகிஸ்தானை ஒழித்துக்கட்ட வேண்டுமென்று சொல்லுவதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் இந்தியாவில் முஸ்லிம்களைப் பாதுகாக்கவேண்டுமென்று சொல்லுவதை நாம் ஒப்புக் கொள்ளமுடியாது.'' என்று எழுதியிருக்கிறது'

'நான் பட்டவர்த்தனமாக எச்சரிக்கின்றேன். பிணைக்கப்பட்டிருக்கும் இவ்விரண்டு விஷயங்களையும் ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரிப்பதற்கில்லை. இந்தியாவில் இதுவரை அனுஷ்டிக்கப்பட்ட இழிவான, அக்கிரமமான அதே போக்கு இனியும் நீடிக்குமானல் பாகிஸ்தான் அழியப்போவது என்னமோ நிச்சயம். ஆனல் இந்தியாவும் அக்கிரமச்சுமை தாங்கமுடியாமல் குன்றி உருக்குலைந்துபோக நேரிடும்.''

''நீங்கள் நேர்மையாக நடக்காதவரை பாகிஸ்தான்மீது குறை கூறுவதற்கில்லை. நேர்மை, சகோதரத்துவம் நமக்குள் நிலவவேண்டும். ரத்தக்கறை படிந்த கைகளைக்கொண்டு எதிரியை சுட்டிக்காட்டுவது சரியல்ல''

''மகாத்மா காந்தியின் உபதேசத்தை அனுஷ்டிப்பதன் மூலமே நாம் உயிர்வாழமுடியும். காந்திஜி முஸ்லிம்களைக் காப்பாற்றிவிட்டார் என்று சிலர் சொல்லுகின்றனர் ஆனல் நான் சொல்லுகின்றேன், காந்திஜி ஹிந்து, சீக்கியர்களையும் இந்தியாவையும் காப்பாற்றியிருக்கிறார். முஸ்லிம்களை வெளியேற்ற நாம் முயற்சித்தால் இந்தியாவும் நாசமடையும். எல்லா மதத்தினரும் இந்திய சடலத்தின் அங்கங்கள் ஒரு பிரிவினரை அழிக்க முயற்சிப்பது தற்கொலையாகும்''

''முஸ்லிம்களைத் தாக்குவது சர்க்காரையும் தேசத்தின் ஜீவனையும் தாக்குவதாகும். தேசத்தில் ஒரு மத்திய அரசாங்கத்தை நிலை நாட்டுவது நம் லட்சியமானல் ''ஹிந்துராஜ்யம்'' ''சீக்கியஸ்தான்'' போன்ற சீர்கேடான எண்ணங்களை நாம் ஒழிக்கவேண்டும். இல்லையேல் தேசம் சிதறுண்டு நாம் படுகுழியில் வீழ்வோம்''

''கோபத்தை அகற்றுவதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. கோபத்தை கோபத்தினல் அகற்றுவது ஒன்று; புத்திசாலித்தனமாக உகந்த வழியில் குறைகளை நீக்க முயற்சிப்பது மற்றென்று.''

''இந்தியாவில் மத அடிப்படையில் ஆட்சி அமைக்கப்பட்டால் நமக்குத் துணை இல்லாமல் போய்விடும். ஆனல் சமத்துவம், ஜனநாயகம், சுதந்திரத்தை அடிப்படையாகக்கொண்டு பசி, பிணி, அறிவின்மை, வறுமையற்ற ஒரு நவ இந்தியாவை நிர்மாணித்தால் ஆசியாவுக்கு வழிகாட்டிகளாக நாம் இருக்கமுடியும் உலகநாடுகள் நம் துணைவர்களாக இருக்கும்.''

''நாலரை கோடி முஸ்லிம்களை வெளியேற்றுவதென்பது அசாத்தியம்மட்டிலுமல்ல. பைத்தியக்காரத்தனமுமாகும் அவ்விதம் முயற்சிக்கப்பட்டால் தேசம் நாசத்திற்குள்ளாகும் என்று மீண்டும் ஒரு முறை எச்சரிக்கிறேன்''

வெளியேற்றம் என்ற பேச்சைவிட்டு காங்கிரஸிலேயே இருந்து தங்கள் உயரிய லட்சியங்கள் நிறைவேற உழைக்கும்படி சோஷியலிஸ்டு என்ற முறையில் நாம் லோஹியாவையும் சோஷியலிஸ்டுகளையும் வேண்டுகிறோம்.

---

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

மஹாத்மாஜி ''காணமின்றி என்னை அடித்து துன்புறுத்தியது முடிவில் எனக்கும் நான் செய்யவேண்டிய காரியத்திற்கும் பெரிய அனுகூலங்களை ஏற்படுத்திவிட்டது சத்தியாக்ரகத்தைப்போன்றதொரு சக்தி வாய்ந்த ஆயுதம். அதன் மூலம் எனக்குக் கிடைத்துவிட்டது'' என்று உள்ளம் பூரித்தார்.

# கடல் குடுக்கையிலே!

**அன்பு சாகரம், கருணைக்கடல், தன்னடக்கத்தின் உறைவிடம், நம்பிக்கை குன்று, சமாதான, சகோதரத்துவ லட்சிய புருஷர், சத்தியம், தர்மம், நேர்மை, சகிப்புத்தன்மையின் தங்கிடம், அறியாமை, இருளைப் போக்கும் சூரியன், சுதந்திரத்தின் தந்தை, சமாதான தூதர், சுதந்திர இந்தியாவின் வயோதிகவீரர், தேசியத்தந்தை, மஹாத்மா காந்திஜியின் வாழ்க்கைச் சுருக்கம்.**

மஹாத்மா காந்தி கத்தியாவாரைச் சேர்ந்த போர்பந்தரில் 1869-அக்டோபர் 15-ல் பிறந்தார். பதிமூன்றுவது வயதில் திருமணம் ஆயிற்று. 20-வது வயதில் இங்கிலாந்தில் பாரிஸ்டர் பட்டம் பெற்று இந்தியா திரும்பினர். பம்பாய் ஹை கோர்ட்டிலும், கத்தியாவார் சமஸ்தானங்களிலும் வக்கீல் தொழில் நடத்திவந்தார். 1892-ல் அப்துல்லா கம்பெனி மஹாத்மாஜீயை தென்னுப்பிரிக்காவிற்கு அனுப்பிவைத்தது. அச்சமயம் அப்துல்லா கம்பெனிக்கும், அதன் ஒரு கூட்டாளியான சேட் தயப்ஜிக்கு மிடையில் வியாஜ்யம் நடந்துகொண்டிருந்தது கம்பெனி சார்பில் வக்கீலாக ஒருவருஷம் வரையில் ஆஜராகி கேஸ் நடத்திவந்தார். ஒரு வருஷத்திற்கு பிறகு இருவருக்கும் ராஜி செய்துவைத்தார்.

சேட் ஹாஜிமுஹம்மது, சேட் அப்துல்லாவின் முயற்சியால் நெட்டால் இந்திய காங்கிரஸ்ஸ்தாபனம் அமைக்கப்பட்டது. காந்திஜி அதன் காரியதரிசியாக இருந்துவந்தார். 1893-முதல் 1914-வரையில் காந்திஜி தென்னுப்பிரிகாவில் இருந்திருக்கிறார்.

1896-ல் பிரிட்டிஷாருக்கும், தென்னுப்பிரிகாவிலுள்ள ஒரு பிரிவினருக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தத்தில் காந்திஜி பிரிட்டிஷாருக்கு உதவ வேண்டி இருந்தது.

1906-ல் கருப்பு சட்டத்தை எதிர்த்து சத்தியாக்ரக போராட்டம் ஆரம்பித்தார். அதனுல் காந்திஜி கைது செய்து சிறையில் வைக்கப்பட்டார் உடனே அன்னை கஸ்தூரிபாய் காந்தியால் இரண்டாயிரம் பெண்களுடன் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கப்பட்டது.

1914-ல் தாய்நாடு திரும்பினர். 1919-ல் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தார். 1920-ல் கல்கத்தா ஸ்பெஷல் காங்கிரஸ் கூட்டத்தில் ஒத்துழையாமை தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. 1921-ல் பிரின்ஸ்ஆப் வேல்ஸின் விஜயத்தை பகிஷ்கரித்து பம்பாயில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அச்சமயம் ஏற்பட்ட கலவரங்களால் மஹாத்மாமனம் நொந்தார். 1922-ல் சௌரா சௌரி பலாத்கார சம்பவத்தை ஒட்டி இயக்கத்தை நிறுத்திவிட்டார்.

1932 மார்ச்சு 10-ல் அஹமதாபாத் ஆசிரமத்தில் கைதுசெய்யப்பட்டார். 1924 செப்டம்பர் 4-ல் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக 21-நாள் உண்ணு விரதம் இருந்தார். அதுவரையில் காந்திஜி கோரி வந்த குடியேற்ற நாட்டு அந்தஸ்தை விட்டு பூரண சுதந்திரம் என்று தீர்மானித்தார். 1912-ல் கல்கத்தா கூட்டத்தில் பூரண சுதந்திர கோரிக்கை விடுக்கப்பட்டது. 1929-ல் வட்டமேஜை மஹாநாட்டில் கலந்துகொள்ள லண்டன் சென்றார்.

1930-ல் உப்பு சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்து ஏப்ரல் 5-ம் தேதி டாண்டி அடைந்து மறு தினமே சிவில் சட்டமறுப்பை துடங்கினர். 79 தொண்டர்கள் கூட இருந்தனர். மே-மீ 4-ந்தேதி கைது செய்யப்பட்டார். சில மாதங்களுக்கு பிறகு இரண்டாவது வட்டமேஜை மஹாநாட்டில் கலந்துகொண்டார். பிறகு காந்தி இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது மீண்டும் 1932-ல் கைது செய்யப்பட்டு ஹரிஜனங்களுக்கு வழங்கப்பட்ட தனித்தொகுதியை எதிர்த்து சிறையிலேயே செப்டம்பர் 20-ல் உண்ணு விரதம் ஆரம்பித்தார். முடிவில் சர்க்கார் இணங்க வேண்டியதாயிற்று. அதிலிருந்து ஹரிஜன முன்னேற்றவேலையில் முனைந்தார். 1937-ல் சட்டசபை தேர்தல்கள் நடந்தன. 1935-ம் வருஷ இந்திய சர்க்கார் சட்டத்தின் கீழ் ஒன்பது மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரிசபைகள் அமைந்தன. மஹாத்மாஜியின் முயற்சியால் காங்கிரஸ் பலம்பெற்று காங்கிரஸ் மந்திரிசபைகள் அவருடையயோஜனைக்கிணங்க வேலை செய்துவந்தன. 1939-ல் யுத்தம் ஆரம்பமாயிற்று. இந்தியர்களின் சம்மதமின்றி இந்திய வைஸ்ராய் இந்தியாவை யுத்தத்தில் ஈடுபடுத்தினர். அதை கண்டித்து மந்திரிசபைகள் ராஜினமா செய்தன. ராணுவத்தில் இந்தியர்கள் சேர்க்கப்படுவதை எதிர்த்து 1940-முடிவில் மஹாத்மாஜி தனி நபர் சத்தியாக்கிரகம் ஆரம்பித்தார். பிரிட்டிஷாருக்கு யுத்த உதவி மறுக்கப்பட்டது

சரித்திர பூர்வமான 1942-ம் வருஷத்தில் மஹாத்மாவின் தலைமையில் இந்தியா "இந்தியாவை விட்டு வெளியேறு" என்று கர்ஜித்தது. ஆகஸ்டு 9-ல் மஹாத்மாஜியுடன் இந்திய தேசியத் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். பூனாவில் உள்ள ஆகாகான் மாளிகையில் மஹாத்மாஜி பாதுகாப்பில் வைக்கப்பட்டபோது மகாதேவ தேசாய், அன்னை கஸ்தூரிபாய் இருவரையும் இழந்தார். 1945-ல் உடல் நிலை காரணமாக விடுதலைசெய்யப்பட்டார். காங்கிரஸ் தலைவர்களும் விடுதலைபெற்றனர். அதே வருஷம் முதல் சிம்லா மஹாநாட்டுக்கு அழைக்கப்பட்டார் 1946-ஆரம்பத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்த மந்திரி தூதுகோஷ்டியுடன் மஹாத்மாவின் தலைமையில் காங்கிரஸ் தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்தினர். மந்திரி தூதுகோஷ்டி திட்டத்தை ஏற்று இடைக்கால சர்க்காரும் அமைந்தது.

1946-செப்டம்பர், நவம்பரில் நவகாலி, பீகார் கலவரங்கள் ஆரம்பித்தன. முதலில் நவகாலிக்கும், பிறகு பீகாருக்கும் விஜயம் செய்து பாதிக்கப்பட்ட மக்களை மீண்டும் குடியேற்றுவதில் மஹாத்மாஜி அடைந்த வெற்றி அவருடைய வாழ்க்கையில் மிகப் பெரிய சாதனையாகும்.

காந்திஜி பிரிவினையை ஏற்கவில்லை. ஆயினும் நாட்டின் சூழ்நிலையும், வளர்ந்துகொண்டே போன கலவரங்களும், பாஞ்சால சம்பவங்களுக்கும் பிறகு வங்க, பஞ்சாப் பிரிவினையுடன் நாட்டின் பிரிவினையை காங்கிரஸ் ஏற்கவேண்டிவந்தது. லார்ட் மவுண்ட் பேட்டன் பதவி ஏற்றார். காங்கிரஸ், லீக் தலைவர்களுடன் கலந்துபேசி பிரசித்திபெற்ற ஜூன் மூன்றுந்தேதி திட்டத்தை வெளியிட்டார், ஆகஸ்ட் 15-ந் தேதி இந்தியா சுதந்திரம் அடைந்தது.

மஹாத்மாஜியின் வாழ்நாட்களிலேயே அவருடைய முயற்சிகள் வெற்றியடைந்து நாடும் சுதந்திரம் அடைந்துவிட்டது. ஆயினும் வகுப்புவாத கலவரங்கள் மூண்டு லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். அச்சமயம் கல்கத்தாவில் இருந்த மஹாத்மாஜி மனம்நொந்து ஹிந்து, முஸ்லிம் ஒற்றுமையை நிலைநாட்ட உண்ணாவிரதம் ஆரம்பித்தார். உலகம் பிரமிக்கும்படி 73-மணி நேரத்தில் அனல்காற்றுப்பொசுக்கிக்கொண்டிருந்த கல்கத்தாவில்சமாதான தென்றல் வீச ஆரம்பித்தது. அங்கிருந்து பாகிஸ்தானுக்கு போகப் புறப்பட்ட மஹாத்மாஜியை டெல்லியில் ஏற்பட்ட கலவரங்கள் போகவிடாமல் டெல்லியிலேயே தங்கும்படி செய்து விட்டன. போலீசும் ராணுவமும் சாதிக்கமுடியாத வேலையை டில்லியில் காந்திஜி சாதித்துக் காட்டினார். டெல்லியிலேயே தங்கி ஹிந்து, முஸ்லிம் ஒற்றுமை ஏற்படுத்தி அமைதியை நிலைநாட்டும் மகத்தான வேலையில் முனைந்தார். பிரார்த்தனை கூட்டங்களிலே அனுதினமும் சமாதான உபதேசம் செய்து முடிவில் உண்ணாவிரதம் ஆரம்பித்தார். 122-மணி நேரத்தில் எல்லா வகுப்புக்களையும் சேர்ந்த தலைவர்கள் உறுதி அளித்து உண்ணாவிரதத்தை முடிக்கும்படி வேண்டிக்கொண்டதை அங்கீகரித்தார். ஜனவரி 20-ந்தேதி மாலை பிரார்த்தனைக்கூட்டத்தில் மஹாத்மாவை கொல்ல குண்டு வீசப்பட்டது. அதில் அயோக்கியர்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை. ஆனால் ஜனவரி 30-ந்தேதி மாலை நடந்த தாக்குதலில் மஹாத்மாஜியின் வாழ்க்கை சுடர் அணைந்துவிட்டது

மஹாத்மாஜி முதல் உண்ணாவிரதம் 1913-ல் தென்னாப்பிரிகாவில் அனுஷ்டித்தார். ஆசிரமத்தின் சில மெம்பர்கள் நடத்தையை கண்டித்து இந்த உண்ணாவிரதம் ஏழு நாட்கள் நீடித்தது.

1914-ல் இதே காரணத்திற்காக பதினான்கு நாட்கள் உண்ணாவிரதமிருந்தார்.

1918 பிப்ரவரியில் அஹமதாபாத் தொழிலாளர்களின் கோரிக்கை பூர்த்தியடைந்து நியாயமான கூலி அவர்களுக்கு கிடைக்கவேண்டு மென்பதை வற்புறுத்தி மூன்று நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார்.

1919-ல் ஒருமுறை மூன்று நாட்கள் உண்ணாவிரதமிருந்தார்.

1921-ல் பிரின்ஸ் ஆப் வேல்ஸின் இந்திய விஜயத்தின்போது மஹாத்மாஜி உண்ணாவிரத மிருந்தார்.

1924-ல் ஹிந்து, முஸ்லிம் ஒற்றுமைக்காக 21 நாட்கள் உண்ணாவிரதத்தை அனுஷ்டித்தார் ஹிந்து முஸ்லிம்கள் சகோதரர்களாக வாழ கற்றுக்கொள்வதாக இருந்தால் சந்தோஷமாக உயிர்விட துணிவேன் என்று அறிவித்தார்.

அதே வருஷத்தில் சபர்மதிஆசிரம[...]த சேர்ந்த சிலரின் செய்கைகளுக்கு பிராயச்சித்தம் செய்ய உண்ணாவிரதம் அனுஷ்டித்தார்.

1932-ல் ஏர்வாடாஜெயிலில் 8-நாட்கள் உண்ணாவிரதமிருந்தார். இந்த இரண்டு உண்ணாவிரதங்களும் ஹரிஜனங்களுக்காக அனுஷ்டிக்கப்பட்டன.

அதே வருஷம் இன்னொரு உண்ணாவிரதம் இருந்தார்.

1934-ல் ஹரிஜனங்களுக்காக உண்ணாவிரதம் அனுஷ்டித்தார்.

1935-ல் ராஜ்கோட் உண்ணாவிரதம்.

1943ல் மஹாத்மாஜி உண்ணாவிரதமிருந்தார். அச்சமயம் "வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தில் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்தார்: ஆகாகான் மாளிகையில் மாஹாத்மாஜி அனுஷ்டித்த உண்ணாவிரதத்தால் ஆங்கில ஆட்சிக்கட்டடம் ஆட்டம் கண்டு விட்டது.

மஹாத்மாஜியின் பதினான்காவது உண்ணாவிரதம் இந்திய பிரிவினைக்குப் பிறகு கல்கத்தாவில் ஏற்பட்ட கலவரங்களை தடுப்பதற்காக 1947-செப்டம்பர் 4-ல் ஆரம்பிக்கப்பட்டது. உயிர், உடல் இரண்டையும் பணயம் வைத்து 73-மணி நேரத்தில் வள்ளல் வெற்றி பெற்றார்.

1948-ஜனவரி 13-ம் தேதி பகல் 11-மணிக்கு மஹாத்மாஜியின் பதினைந்தாவது உண்ணாவிரதம் ஆரம்பமாயிற்று. நிரபராதிகளின் ரத்தம் பெருக்கெடுத்து ஓடுகையில், ரத்தவெறி தாண்டவமாடுகையில், ஒழுக்கம் இழந்து, அசுரகுணம் மேலிட்டு, மனிதக்கூட்டம் கொடு விலங்குகளாய் மாறி விட்ட சந்தர்ப்பத்தில், அவர்களுள் மன மாறுதல் ஏற்படுத்தவும், அவர்களுடைய ஆத்மாக்களுக்கு வேண்டுகோள் விடுக்கவும், அவ்வப்போது உண்ணா விரதங்களை அனுஷ்டித்து மாக்களை மக்களாக மாற்றிய தனிப் பெருமை இவ்வுலகத்தில் மஹாத்மாஜி ஒருவருக்குத்தான் உரித்தானது.

### மஹாத்மாவைக் கொல்ல தாக்குதல்கள்.

உலகத்தில் இதற்குமுன் தோன்றிய மஹான்களை கொல்ல எதிரிகள் முயற்சித்ததைப்போலவே மஹான் காந்தியையும் பொறாமைக்காரர்கள் கொன்றுவிட பன்முறை முயற்சி செய்தனர். சத்தியம் அசத்தியத்தை வெல்லும்போதும் பிரகாசம் அந்தகாரத்தை அகற்றும் சமயத்திலும், ஒழுக்கம் காட்டுமிராண்டித்தனத்தை முறியடிக்கும் சந்தர்ப்பத்திலும், அசுரசக்தி ஆழப்புதைக்கப்படும் நேரத்திலும் இதுவரை உலகத்தில் தீயசக்தி நிலைத்திருக்க இறுதி முயற்சி செய்து வந்திருப்பதை நாம் கேள்விப்பட்டுள்ளோம் போலீசினாலும், ராணுவத்தினாலும் 5 மாதங்களில் சாதிக்க முடியாததை ஐந்தே நாட்களில் மஹாத்மாஜி சாதித்து விட்டதைப் பார்த்த தேசத் துரோகிகள் ஒற்றுமை விரோதிகள், சமாதான சத்ருக்கள் ஆவேசங் கொண்டனர். பீரங்கி, துப்பாக்கி, வாள் கொண்டு சாதிக்கமுடியாததை தன் ஒழுக்க சக்தியினால் நிலை

நாட்டிய மஹாத்மாஜியை, சமாதானம், சகோதரத்துவத்தின், மிகப்பெரிய தூதரை கொன்றுவிட வேண்டுமென்று அவர்கள் முடிவுசெய்தனர். அப்பொழுதாகிலும் நீசத்தனமான தங்கள் லட்சியத்தை அடைய முடியும் என்பது அவர்களின் கனவு.

1948 ஜனவரி 20-ம் தேதி மஹாத்மாஜியை கொல்ல பிரார்த்தனை கூட்டத்தில் வெடிகுண்டு வீசப்பட்டது. மஹாத்மாவை கொல்ல நடந்த முயற்சிகளில் இது முதலாவது முயற்சி அல்ல. இதற்கு முன்னும் இம்மாதிரி முயற்சிகள் நடந்திருக்கின்றன.

1934 ஜூன் 25-ல் குண்டு வீசி மஹாத்மாவை கொல்லுவதற்காக ஒரு முயற்சி நடந்தது. குண்டு வீசியவன் யார் என்று இன்றுவரை தெரியவில்லை. இந்த சம்பவம் புனாவில் நடந்தது. அப்பொழுது மஹாத்மா ஹரிஜன முன்னேற்ற வேலையில் தீவிரமாக முனைந்திருந்தார். அதை ஹிந்துக்களில் பலர் கடுமையாக எதிர்த்தும் வந்தனர். காந்திஜி அதில் இருப்பதாக நினைத்து மோட்டார் மீது குண்டு வீசப்பட்டது. அதினால் 7 பேர் காயமடைந்தனர். அதிர்ஷ்டவசமாக காந்திஜியின் மோட்டார் பிறகு வந்தது. புனா அடைந்த பிறகுதான் இச்சம்பவம் மஹாத்மாவுக்கு தெரிந்தது.

சமீபத்தில் கல்கத்தாவில் ஒரு சம்பவம் நடந்தது. 1947 செப்டம்பர் முதல் தேதியன்று காந்திஜி படுக்கை அறையைச் சுற்றி ஆவேசங் கொண்டதொரு கூட்டம் கூடி ஆர்பாட்டம் செய்தது மஹாத்மாவின் மீது தடி வீசப்பட்டது. பிறகு வீசப்பட்ட ஒரு செங்கல்லால் மஹாத்மாவின் பக்கத்தில் நின்றிருந்த ஒரு முஸ்லிமுக்கு காயம் ஏற்பட்டது. இந்த சம்பவத்தை தன்னுடைய டைரியில் மஹாத்மா கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:—

"நான் வாசற்படியில் நின்றிருந்தேன். அறிமுகமான சிலர் அங்கு கூடி என்னை நகரவிடாமல் தடுத்தனர். அன்று எனக்கு மௌன தினம்; எனினும் மௌனத்தைவிட்டு ஆவேசங்கொண்ட வாலிபர்களை பொறுமை, அமைதி இழக்காமல் இருக்கும்படி வேண்டிக்கொள்ள வேண்டியதாயிற்று. என்னுடைய வங்காள பேத்தியை நான் சொல்லுவதை வங்க பாஷையில் மொழிபெயர்த்து சொல்லும்படி சொன்னேன் பலன் இல்லை. அவர்கள் நியாயத்தை கேட்க தயாராக இருக்கவில்லை. நான் கைகளை கூப்பி கும்பிட்டேன். பிரயோஜனம் ஏற்படவில்லை. ஜன்னல் கண்ணாடிகள் உடைக்கும் வேலை நடந்துகொண்டிருந்தது நிதானமாய் நடந்துகொள்ளும்படி கூட்டத்தினரை வேண்டினேன். போலீஸ் அதிகாரிகளும் அங்கு இருந்தார்கள். அதிகார தோரணையில் நடந்துகொள்ளவில்லை. அவர்களும் கைகூப்பி கும்பிட்டு கேட்டுக்கொண்டனர்"

"தடி ஒன்று வீசப்பட்டது. நானும் என் பக்கத்தில் இருந்தவர்களும் தப்பினோம். செங்கல் ஒன்று என்மீது வீசப்பட்டது. நான் தப்பித்தபோதிலும் என்னுடைய முஸ்லிம் நண்பர் ஒருவர் காயப்பட்டார் பெண்கள் இருவரும் என்னைவிட்டுப் பிரியவில்லை. கடைசிவரை என்னுடன் இருந்தார்கள். இதற்கிடையில் போலீஸ் சூப்ரண்டும், இதர போலீஸ் அதிகாரிகளும் வந்துசேர்ந்தனர். அவர்களும் அதிகாரத்தை பிரயோகிக்கவில்லை என்னை படுக்கைக்கு போகும்படி அவர்கள் வேண்டினர். அதன் பிறகு கூட்டம் கலைந்துவிட்டது."

இந்த சம்பவம் கல்கத்தாவில் அமைதியை நிலைநாட்ட மஹாத்மாஜி பாடுபட்ட சமயத்தில் நடந்தது. அதே இரவு மஹாத்மாஜி உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

1897-ல் தென்னாப்பிரிக்காவில் மரணத்திலிருந்து மஹாத்மாஜி தப்பினார். அப்பொழுது அவருக்கு வயது 28. நிறத்துவேஷத்தின் காரணமாக இந்தியர்கள் தென்னாப்பிரிக்க வெள்ளையர்களால் துன்பங்கள் அனுபவித்தனர். மஹாத்மா காந்தியை திரும்பவும் நேட்டாலுக்கு வரும்படி அவர்கள் அழைத்தார்கள். மஹாத்மாஜி புறப்பட்டு டர்பன் போய்ச் சேர்ந்தார். அங்கிருந்த சில வாலிபர்கள் அடையாளங் கண்டுகொண்டு காந்தி காந்தி என்று கத்த ஆரம்பித்தனர். பிரபல அட்வகேட் மிஸ்டர் லாப்டன் என்பவர் மஹாத்மாவுக்காக ஒரு ரிக்ஷாவுக்கு ஏற்பாடு செய்தார். ஆனால் கூட்டம் அவரை ரிக்ஷாவில் ஏறவிடாமல் தடுத்து அழுகிய முட்டைகள், செங்கற்கள் அவர் மீது வீச ஆரம்பித்தது தலைப்பாகையை தட்டிவிட்டார்கள் அடித்து உதைத்து முஷ்டிகளால் குத்தி, முகத்தில் அறைந்து முடிவில் மஹாத்மாவை ஒரு வீட்டின் வாசற்படியில் கொண்டுபோய் தள்ளினார்கள் அச்சமயம் போலீஸ் பிரசிடெண்ட் எதிர்பாராதவிதம் அங்கு வந்துசேர்ந்தார் வாலிபர்களை தடுத்து நிறுத்தி மஹாத்மாவை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றார். காயங்களுக்கு கட்டு கட்டி ஸ்டேஷனிலேயே தங்கும்படி கேட்டுக்கொண்டதை மஹாத்மாஜி மறுத்துவிட்டார் "அவர்களுடைய தவறை உணர்ந்த பிறகு அவர்கள் திருந்திவிடுவார்கள். நாம் அதை நம்பலாம்" என்று சொல்லி ஸ்டேஷனிலிருந்து ருஸ்தும்ஜி வீட்டை அடைந்தார்.

வெள்ளையர்கூடி வீட்டை வளைத்துக்கொண்டு காந்தியை எங்களிடம் ஒப்படையுங்கள் என்று ஆர்ப்பாட்டம் செய்தனர். போலீஸ் அதிகாரி வேண்டுகோளுக்கிணங்க மாறுவேஷத்துடன் வெளியேறிய காந்திஜி அதே போலீஸ் ஸ்டேஷனுக்கு கொண்டுபோகப்பட்டார் நேட்டால் கவர்மெண்டுக்கு பதிலளிக்கையில் "நான் ஒருவர் பேரிலும் குற்றம் கற்பிக்கவில்லை நடவடிக்கை நடத்த விரும்பவும் இல்லை. இந்தியாவில், நெட்டால் வெள்ளை நிறத்தவர்களுக்கு எதிராக நான் தவறான அறிக்கைகள் வெளியிட்டதாக என்னைத் தாக்கவந்தவர்கள் நம்பும்படி பிரசாரம் செய்யப்பட்டிருக்கிறது அதுதான் அவர்களுடைய ஆவேசத்திற்குக் காரணம். உண்மை உணரும்பொழுது தாங்கள் செய்ததைக் குறித்து அவர்கள் பச்சாத்தாபப்படுவார்கள் என்று நான் நம்புகிறேன்."

பத்திரிகைகள் வெள்ளையர்களின் நடத்தையை கண்டித்து எழுத ஆரம்பித்தன. வெள்ளையர்கள் தவறை உணர்ந்தனர். இச்சம்பவத்தைக் குறித்து

(7-ம் பக்கம் பாாக்க)

## நரகத்திலிருந்து தப்பி வந்தேன்

சஹாரன்பூர்,

"பேபாக்" என்ற உள்ளூர் பத்திரிகை ஒன்றில் ஆயிரம் ஷியாக்களை அழைத்துக்கொண்டு பாகிஸ்தானுக்குச் சென்ற ஷியா முதலாளி ஒருவர் தன் சகாக்களை பாகிஸ்தானில் திண்டாட விட்டுவிட்டு திரும்பி சாஹாரன்பூருக்கே ஓடிவந்திருக்கும் ருசிகரமான சம்பவம் ஒன்று பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

"சஹாரன்பூரில் நடந்த கலவரங்களின்போது பணக்கார ஷியா குடும்பம் ஒன்றின் தலைமையில் 1000 ஏழை ஷியாக்கள் பாகிஸ்தானுக்கு புறப்பட்டு சென்றனர். அகதி ஸ்பெஷல் ரயிலுக்காக அகதி முகாமில் தன்னுடைய பரிவாரங்களுடன் அந்த ஷியா முதலாளி காத்துக்கொண்டிருந்தபோது நகரத்தின் எல்லா வகுப்பையும் சேர்ந்த பிரமுகர்கள் அவரை சஹாரன்பூரிலேயே இருக்கும்படி கேட்டுக்கொண்டதுடன் அதிகாரிகளும் எல்லாவித பாதுகாப்பும் அளிப்பதாக உறுதியளித்தனர்."

"பாகிஸ்தான் சொர்க்கக்கதவுதிறந்துகிடப்பதையும் அங்குள்ள சுகபோகங்கள் அவரை அழைப்பதையும் பார்த்துக்கொண்டிருந்த அந்தபுண்ணியவானிடம் யாருடைய முயற்சிதான் பலிக்க முடியும்! எல்லோரையும் உதறிதள்ளிவிட்டு நவம்பர் 11ந் தேதி பரிவார சகிதமாய் பாகிதாஸ்னுக்கு பிரயாணமானார். அவருடைய ஏராளமான செல்வத்தைக் கொண்டும், குடும்ப கௌரவத்தைகொண்டும் அவருடன் சென்ற ஏழைகள் இந்திய நரகத்திலிருந்து பாகிஸ்தான் சுவர்க்கத்திற்கு வந்துவிட்டதாக சந்தோஷப் படக்கூடிய நிலைமையில் அங்கு வாழ்வார்கள் என்று நாமும் நினைத்தோம்"

"ஆனால் இரண்டேகால் மாதங்களுக்கு பிறகு அந்த ஷியாபிரமுகர் ஸஹாரன்பூருக்கே திரும்பி வந்துவிட்டார். அவரை நம்பிச்சென்ற ஏழைகள் எங்கிருக்கின்றனர் என்று தெரியவில்லை. அவர் பாகிஸ்தானுக்கு புறப்படுகையில் ஆயிரம் ஏழைகளின் ஒன்றுபட்ட சக்தியாக காட்சி அளித்துக் கொண்டிருந்தார். ஆனால் இன்று அவரை பார்க்கும்பொழுது ஒவ்வொருவனும் தனக்குத்தானே பொருப்பு என்று தெரியவருகிறது நண்பர்கள் பாகிஸ்தான் எப்படி இருக்கிறது என்று கேட்கும்பொழுது "நரகத்திலிருந்து தப்பி வந்திருக்கிறேன்" என்று பதிலளிக்கின்றார். அதற்கு மேல் உங்களுடன் சென்ற 1000-ஏழைகளின் பரிவாரம் எங்கே என்று நாம் கேட்டால் "பாகிஸ்தான் நரகம் அவர்களை விழுங்கிவிட்டது" என்றுதான் பதிலளிப்பார். ஏழைகள் இந்த பெரிய மனிதர்களை நம்புவதும் முதலாளிகள் அவர்களை துச்சமாக எண்ணி அலட்சியம் செய்து ஒதுக்கி தள்ளுவதையும் பார்த்தால் பரிதாபப்படாமல் இருப்பதற்கில்லை."

---

## வாருங்கள் வழிநடப்போம்.

"எஸார்"

உலகம் இருளை நோக்கி உருண்டோடிக்கொண்டிருந்தது. "ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு மறு கன்னத்தைத் திருப்பிக் கொடு" என்ற எம்மான் கிறிஸ்துவின் பொன்மொழிகள் அவனைப் போற்றிப் புகழும் மக்களாலேயே புறக்கணிக்கப்பட்டுவிட்டன. கோவில்களில் திருப்பணிகள் குறைவின்றி நிறைவேறின, அதே சமயத்தில் ஆயுதச் சாலைகளின் அதிகரிப்புத் திட்டமும் அவர்கள் மனதைக் கவர்ந்திருக்கிறது. "சமாதானமுள்ளவர்கள் பாக்கியவான்கள் ஏனெனில் ஆண்டவரின் பிள்ளைகள் எனப்படுவார்கள்" என்னும் புனித வசனங்களை ஜபிக்கும் வாய்களிலிருந்தே விடாதே, பிடி, வெற்றி நமதே என்ற வார்த்தைகளும் மாறிமாறி வந்தன. அஹிம்சைக்கும்-ஹிம்சைக்கும், ஒற்றுமைக்கும்-குரோதத்திற்கும், சத்தியத்திற்கும்- அசத்தியத்திற்கும் நடைமுறையில் வேற்றுமையில்லை என நிரூபிக்கப்பட்டு விட்டது. அவை காலச் சக்கரத்தினடியே அகப்பட்டு நலிந்துகொண்டிருந்தன.

ஆசியாவின் மூலையிலே ஓர் அகல்விளக்கு எழுந்தது. அதினின்று வீசிய அஹிம்சை, சத்தியம் ஒற்றுமை என்ற புனிதமான ஒளிக்கதிர்கள் இருண்ட உலகம் ஓடுகின்ற பாதையின் பயங்கரத்தைச் சுட்டிக்காட்டின. மதியற்ற உலகம் அதன் மாண்பை புரிந்து கொள்ளவில்லை.

கோரக்குரல்களுக்கிடையே அஹிம்சை, சத்தியம், ஒற்றுமை என்ற ஹீனக்குரலோசை ஆனால் ஹிருதயத்தை தொடுகின்ற பாணியிலே தனித்து ஒலித்தது. குரோதம், ஹிம்சை, அசத்தியம் இவைகளின் குறும்புச் சிரிப்பொலி அதை அடக்கிவிட முயன்றது. ஆனால் அஹிம்சையின் புன்சிரிப்பிலே அவை புறங்காட்டின. அஹிம்சை வென்றது, அகல்-பந்தமாயிற்று. ஆசியாமட்டுமல்ல அவனியே அதனொளியில் உலகம் உருண்டோடும் இருண்ட பள்ளத்தாக்கைக் கண்டது.

இகத்தின் இறந்தகால நியதிப்படி எதிர்ப்புச் சக்திகள் அறியாமையின் ஆதரவிலே வளம்பெற்றன. ஞான விளக்கேந்தி உலகிற்கு நல்வழிகாட்டிய உத்தமன் ஏசுவுக்கும், நபிக்கும் காட்டிய நன்றியே நம்மான் காந்திக்கும் காட்டப்பட்டுவிட்டது.

சுட்டிக்காட்டிய கரங்கள் துண்டிக்கப்பட்டன. பொன்னிறமேனி வெண்ணிறப்புகையோடு மறைந்துவிட்டது. அந்த ஹீனக்குரல் இயற்கையின் ஒலிகளோடு கலந்துவிட்டது. ஆனால் வீசுகின்ற தென்றலிலே, பேய்க்காற்றின் பேரொலியிலே, ஓடையின் சலசலப்பிலே, குமுறும் கடலின் கோரக்குரலிலே அம் மணிவாசகங்கள் எதிரொலிக்கின்றன.

பந்தமேந்திய கரங்கள் பறிக்கப்பட்டுவிட்டன. ஆனால் பந்தம் அவியவில்லை. சுட்டிக்காட்டிய கரங்கள் இல்லை. ஆனால் காட்டிய நீள்வழி தெரிகின்றது

இன்னுமென்ன ஏக்கம்? வாருங்கள் வழி நடப்போம்.

**வாழ்க எம்மான்! வாழ்க காந்தீயம்!!**

# ஏன் இந்த முதலைக் கண்ணீர்?
## வேறு வினையே வேண்டாம்.

“இந்திய முஸல்மான்கள் நமக்காக செய்திருக்கும் அளவற்ற தியாகத்தினாலேயே பாகிஸ்தான் ஏற்படுவது சாத்தியமாயிற்று. பின் தங்கிவிட்ட நம் சகோதரர்களை மறந்துவிடாமலும் அவர்கள் செய்த தியாகத்தை அலட்சியம் செய்யாமலும் இருப்பது நம் கடமை.”

ராவல்பிண்டியில் நடந்த கூட்டத்தில் பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஜாதா லியாகத் அலிகான் மேற்கூறியவிதம் பேசினார்.

என்ன அன்பு! எவ்வளவு கருணை! நம் க்ஷேம லாபத்தில் நவாப்ஜாதா கொண்டிருக்கும் அக்கரையை வர்ணிக்கத்தான் முடியுமா? இந்திய முஸல்மான்களுக்கு இனி குறைவேயில்லை!

நவாப் ஜாதா நம்விஷயத்தில் காட்டும் அக்கரையே நமக்கு வைக்கப்படும் வெடிகுண்டு என்று அவருக்குத் தெரியாமல் இருக்குமா? நாலரை கோடி முஸ்லிம்கள் தேசத்துரோகிகள், ஐந்தாம் படையினர், என்று சந்தேகிக்கப்பட வேண்டுமாயின், இந்தியர்களின் நம்பிக்கையை இழந்து, அவர்கள் எதிர்காலத்தை பாழாக்கிக் கொள்ளவேண்டுமென்பது நவாப் ஜாதாவின் ஆசையாக இருந்தால் நம்மை இன்னும் தட்டிக்கொடுக்கட்டும். கூப்பாடு போடட்டும். நாம் பாகிஸ்தானை நம்பி வாழ்வதாக மற்றவர்கள் நினைக்க பாகிஸ்தான் லீடர்கள் காட்டும் அனுதாபம் ஒன்றே போதும். வேறு வினை ஒன்றும் வேண்டியதில்லை. துரோகிகள் என்று சந்தேகிக்க வேறு அத்தாட்சியும் வேண்டுமா?

நாலரைகோடி முஸ்லிம்களை கைவிட்டு ஜின்னா கோஷ்டியார் பாகிஸ்தானை வாங்கிக் கொண்டனர். ஆசை ஊட்டி பயம், வெறுப்பு புகட்டி, இஸ்லாமின் பெயரால் பாமர முஸ்லிம்களை தூண்டி, இஸ்லாமிய ஒழுக்கத்தை கேவலப்படுத்தி உண்மை முஸ்லிம்களாகிய உலமாக்களை அகௌரவித்து காரியத்தை சாதித்துக்கொண்ட லீக் லீடர்கள் ஒவ்வொருவராய் பாகிஸ்தானுக்கு கம்பி நீட்டினார்கள். கடந்தகால செய்கைகளின் விளைவுகள் அனுபவிக்கவேண்டிய காலம் வந்தபொழுது லீக் லீடர்களைக் காணவில்லை. நாலரைகோடி முஸ்லிம்களின் எதிர்காலத்தைக் குறித்து கொஞ்சமும் கவலையின்றி, திரும்பியும் பார்க்காமல், ஓடிமறைந்த லீக்லீடர்கள் இன்று பாகிஸ்தானில் இருந்துகொண்டு அவகாசம் கிடைக்கும்போதெல்லாம் நம்மை நினைக்க முற்பட்டிருக்கின்றனர். நம்மைத் தொலைக்க அவர்கள் அனுதாபம் ஒன்றே போதுமானது. பாகிஸ்தானை வாங்கிக் கொடுக்க அனுபவித்த துன்பங்களுக்குப் பிறகு இனியும் நம்மால் கஷ்டப்படமுடியாது.

நமக்கு உதவ பாகிஸ்தானால் முடியுமா? இல்லை. பின் எதற்காக நவாப் ஸாதா முதலைக் கண்ணீர் வடிக்கவேண்டும்? உண்மையாகவே நம்மைக் குறித்து அவர்களுக்கு கவலை இருந்தால் அவர்கள் நம்மை அறவே மறந்துவிடவேண்டும். இதைவிட அவர்கள் நமக்கு செய்யும் உதவி வேறு ஒன்றுமில்லை. ஆனால் நம்மைக் குறித்து அவர்களுக்கு கவலை இருந்ததாகவும் தெரியவில்லை.

விகிதாசாரத்திற்கு தகுந்தபடி சர்க்கார் உத்தியோகங்களில் முஸ்லிம் அல்லாதாருக்கு பங்கு கொடுக்க சிந்து மாகாணம் தீர்மானித்தது. ஐக்கிய மாகாணம், பீகார், பம்பாய் முதலிய மாகாணங்கள் அதை பின்பற்றின முஸ்லிம்களின் பிரதிநிதித்வம் குறைக்கப்பட்டது. இது பாகிஸ்தான் நமக்கு செய்த பெரிய உதவியல்லவா?

வெளியேறும் ஹிந்து, சீக்கிய அகதிகளை பாகிஸ்தான் சோதனைபோட்டு, முஸ்லிம் அகதிகளை இந்தியாவிலும் சோதனைக்குள்ளாக்கியது. அவ்வளவு மட்டுந்தானா பாகிஸ்தான் நமக்குச் செய்த உதவி! பாகிஸ்தானில் முஸ்லிம் அல்லாத அகதி ரயில்கள் தாக்கப்பட்டன. அகதிகள் கொலை செய்யப்பட்டனர். கொள்ளையிடப்பட்டனர். கிழக்கு பஞ்சாப் வழியாக பாகிஸ்தானுக்கு சென்ற முஸ்லிம் அகதி ரயில்கள் தாக்கப்பட்டு பிணங்கள் லாகூர் போய்ச் சேர்ந்தன. பாகிஸ்தானிகள் நமக்கு செய்த உபகாரங்கள் இவ்வளவும் போதாதா! இன்னும் அனுதாபம் வேறு காட்டப்பட வேண்டுமா! பாக்கியுள்ளதும் தீர்ந்துவிடவேண்டுமென்ற எண்ணமா?

உங்களை ஆதரித்தது பெரும் குற்றமே! அதை நாம் மறுக்கவில்லை. அதற்கான தண்டனையும் அனுபவித்துவிட்டோம். அது மட்டுமல்ல. உங்கள் செய்கைகளுக்கும் சேர்த்து நாம் தண்டிக்கப்பட்டோம். எப்படி இருப்பினும் நடந்தது நடந்தேறிவிட்டது. இனி நீங்கள் வேறு நாம் வேறு. உங்கள் சுவர்க்கத்தில் நீங்களே இருங்கள். நமக்கு வேண்டாம். இன்னும் நம்மை விடமாட்டீர்களா? மன்னிக்க மாட்டீர்களா? உயிர் வாழ அனுமதிக்க மாட்டீர்களா? நம்மை நம் வழியே செல்லவிடுங்கள். பாகிஸ்தான் அமைய நாம் பாடுபட்டது உண்மைதான் உடனே கைமேல் கூலியும் கிடைத்தாய்விட்டது. ஆண்டவன் அறிய சொல்லுகின்றோம். நாம் எவ்வித பிரதிப் பிரயோஜனத்தையும் கேட்கமாட்டோம். நாம் செய்த தியாகத்தை சொல்லிக் காட்டவும் தயாராக இல்லை. நீங்களும் அதை மறந்துவிடுங்கள். அடிக்கடி அதைக் குறித்து பிரஸ்தாபிக்காமல் இருக்கும்படி வேண்டுகிறோம். பாகிஸ்தான் தொல்லைகளை அனுபவித்தாய்விட்டது. இனி நீங்கள் நம்மை தாஜா செய்வதால், நமக்காக வக்காலத்து வாங்கி பேசுவதால், ஏற்படக் கூடிய புதிய துன்பங்களை தாங்க நமக்கு சக்தியில்லை.

ஒழுக்கம், கண்ணியம் இழக்க நீங்கள் தயார் இல்லையென்றால் அங்குள்ள சிறுபான்மையோருடன் நேர்மையாக நடவுங்கள். அவர்களுடைய எதிர்காலத்தைக் குறித்து உத்திரவாதம் அளியுங்கள். பாகிஸ்தான் மைனாரிடியை பாதுகாப்பது எங்களை பாதுகாப்பதாகும். அவர்களுக்கு செய்யப்படும் உதவி எங்களுக்கு செய்யப்படுவதாகும். நீங்கள் இதற்கு தயாராய் இல்லையேல் நாம் வீழ்வோம். அழிவோம். வாழ்க்கை முடிந்துவிடும்.

சென்ற வாரத் தொடர்ச்சி.

# புனர் வாழ்க்கை.

—(o)—

## மீண்டும் ஐக்யம்

சமீபத்தில் மிஸ்டர் ஜின்ஞ வெளியிட்டதோர் அறிக்கையிலும்கூட இந்தியாவை "ஹிந்து ஸ்டேட்" என்றே குறிப்பிட்டிருக்கிறுர். இரண்டு சமுதாயக் கொள்கையைக் கட்டி அழுவதை இன்னும் அவர் விட்டபாடில்லே. இங்நிலேயில் நாம் ராஷ்ட்ரீய சுயம் சேவக் சங்கத்தையோ, ஹிந்து மகா சபையையோ குறை கூற உரிமையேது? மிஸ்டர் ஜின்ஞ சொல்லுவதைத்தான் இவர்களும் சொல்லுகிறுர்கள். அதில் தவறு என்ன?

மிஸ்டர் ஜின்ஞவுக்கு நாலரைகோடி இந்திய முஸல்மான்களேக்குறித்து கவலேயிருந்தால் இந்தியாவை "ஹிந்து ஸ்டேட்" என்று சொல்லியிருக்கமுடியாது. இதை ஹிந்து ஸ்டேட் என்று சொல்லி காயிதே ஆஜம் நாலரைகோடி முஸ்லிம்களே ஹிந்துக்களாகிவிடச் சொல்லுகிறுரா? என்பது தெரியவில்லே. மிஸ்டர் ஜின்ஞ ஒரு சுயநலவாதி. பாகிஸ்தானே "முஸ்லிம் ஸ்டேட்" என்று ஊர்ஜிதம் செய்யும் நோக்கத்துடன் இந்தியாவை "ஹிந்து ஸ்டேட்" என்கிறுர். இந்தியா ஒரு "ஹிந்து ஸ்டேட்" ஆகாதவரையில் பாகிஸ்தான் நிலேத்திருக்கமுடியாது என்பது நிச்சயம் இந்தியா ஜனநாயக நாடாக இருந்தால் ஹிந்து முஸ்லிம்களிடையே இன்றுள்ள மனக்கசப்பு நீங்கி அவர்கள் ஒன்றுபடுவதும் அத்துடன் பாகிஸ்தான் மறைந்து மீண்டும் இந்தியா ஒரே நாடாக விளங்கப்போவதும் நிச்சயம். காயிதே ஆஜம் அதை நன்கு அறிவார்.

### காஷ்மீர் கைவரிசை.

இதற்குமுன் நாம் சொல்லிவந்திருப்பதைப் போல் மிஸ்டர் ஜின்ஞ தன்னுடைய போக்கை மாற்றிக்கொள்ள முடியாது. வெற்றியைத் தேடித் தந்த வகுப்பு வாதத்தை அவர் எப்படி விடமுடியும்? ஏதாவது ஒன்றைத் தூண்டிக்கொண்டிருப்பதிலேயே அவருக்கு லாபம். பாஞ்சால கலவரங்கள் ஒருவாறு அடங்கி வருவதைப் பார்த்தார். ஹிந்து, முஸ்லிம் துவேஷத்தை தூண்டிவிட ஏதாவது புதிர் ஒன்று போட்டாகவேண்டும். திடீரென்று காஷ்மீரத்தில் கைவரிசையை காட்டினுர். இதுகாஷ்மீர் படையெடுப்புக்கு முதல் காரணம் ஹிட்லருக்கும் மிஸ்டர் ஜின்ஞவுக்கும் வித்தியாசமில்லே. ஏதாவது புஸ் வாணங்களே விட்டுக்கொண்டேதான் அவர் இருப்பார்.

காஷ்மீர் நாட்கத்திற்கு இன்னெரு காரணமும் உண்டு பாகிஸ்தானில் குழப்பத்தை உண்டாக்கிக் கொண்டிருப்பவர்களின் கவனத்தை வேறுபக்கம் திருப்பிவிட காஷ்மீர் நாடகம் நல்லதொரு முறையாகும். பாகிஸ்தானுக்குள் இன்று ஒரே அமளி. கிழக்கு பஞ்சாபிலிருந்து அடிபட்டு, உத்தியோகங்கள், சொத்துக்கள், வீடுகள், நிலங்கள், கடைகள், வியாபாரம், எல்லாவற்றையும் விட்டதுடன், தங்களுடைய சுற்றத்தார்களேயும் இழந்து பாகிஸ்தானுக்கு ஓடிவந்திருக்கும் 54 லட்சம் பஞ்சாபிகள், தங்களுடைய நாசத்திற்கு மிஸ்டர் ஜின்ஞவே பொறுப்பாளி என்று குற்றம் சாட்டுகின்றனர். இவர்களுடைய பரிதாபகரமான நிலேமையால் மேற்கு பஞ்சாபிலுள்ள முஸ்லிம்களும் மனவேதனே அடைந்திருக்கின்றுர்கள். இந்தியா பூராவிலுமிருந்த அவர்களுடைய அலுவல்கள் ஸ்தம்பித்துவிட்டன. ஹிந்து, சீக்கியர்களே கொள்ளேயடித்த குண்டர்களேத் தவிர மற்றவர்களுக்கு ஒன்றும் லாபமில்லே. நஷ்டமே அடைந்திருக்கின்றனர்.

### துர்ப்பாக்கிய சிந்து.

சிந்துமாகாணம் சம்பந்தப்பட்டவரையில் இன்று பாகிஸ்தானுக்கு முதல்தர எதிரி அதுதான். சமீபத்தில் சிந்து மாகாண முஸ்லிம் லீக் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. அதில் பாகிஸ்தான் செக்ரடேரியட்டில் ஒரு சிந்துக்காரனேயும் சேர்க்கப்படவில்லே என்றும், எல்லோரும் இந்தியர்கள் அல்லது பஞ்சாபிகளே இருக்கிறுர்கள் என்றும், பாகிஸ்தான் மந்திரி சபையில் ஒரு சிந்துக்காரனுமில்லேயென்றும், குறை கூறப்பட்டிருக்கிறது, (இன்று பீர்ஜாடா சேர்க்கப்பட்டிருக்கிறுர்) பாகிஸ்தான் அரசாங்கம் கராச்சியை ஸ்வீகரித்துக்கொண்டு சிந்து அரசாங்கத்தை ஹைதாராபாத்து (சிந்து)க்கு போகும்படி சொல்லுகிறது. இந்திய முஸல்மான்கள் கராச்சியில் குடியேறியதால் வாழ்க்கைத்தேவைகளின் விலேகள் பன்மடங்கு அதிகரித்துவிட்டன. வீடுகள் கிடைக்கவில்லே. கராச்சி போன்ற அழகான நகரத்தில் ஒரு சாண் காலி நிலமும் இருக்கவில்லே. மைதானங்களிலெல்லாம் இந்திய முஸல்மான்கள் கூடாரங்களில் கிடக்கின்றனர். சுகாதாரம் கெட்டுபலவித தொத்துநோய்கள் பரவி விட்டன. லாஹூர் அகதி முகாமில் இருபது லட்சம்பேர் தங்கியிருக்கின்றனர். காலருவினுலும் பசியாலும் தினம் எண்ணுயிரத்துக்கு மேல் இறக்கின்றனர் என்

றும், சவ அடக்கம் செய்ய துணி கிடைக்காததால் அப்படி அப்படியே பிணங்கள் அங்கங்கே கபன் துணியும் இல்லாமல் பள்ளங்களில் தள்ளப்படுகின்றன என்றும் சொல்லப்படுகிறது.

### பட்டாணியர் எழுச்சி

எல்லைப்புறம் முதலிலிருந்தே பொருளாதார வசதியற்ற ஏழை மாகாணம். ஹிந்து, சீக்கியர்களின் வெளியேற்றத்தால் இந்தியாவுடன்வியாபாரத்தொடர்பற்று மேலும் அது பாதிக்கப்பட்டுவிட்டது. பாகிஸ்தான் எப்படி இருக்கும் என்று பட்டாணியர்கள் தெரிந்துகொண்டுவிட்டார்கள். இன்று பாகிஸ்தானுக்கு எதிராக பட்டாணிஸ்தான் கிளர்ச்சி பலமடைந்து வருகிறது. மிஸ்டர் ஜின்னு காட்டிய ஆசை வலையில் சிக்காமல் இப்பி பக்கீர் ஆப்கனிஸ்தானில் தற்காலீக அரசாங்கம் ஒன்றை அமைத்துக் கொண்டிருக்கிறுர். பட்டாணிஸ்தான் கிளர்ச்சியைப் பலஹீனப்படுத்தவும், வறுமையால் பீடிக்கப்பட்டிருக்கும் பட்டாணியர்கள் கவனத்தை வேறு பக்கம் திருப்பவுமே காஷ்மீர் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. பட்டாணியர்களைக் கொள்ளையடிக்க ஒரு இடத்தைக் காட்டுவதுதான் காஷ்மீரப் படையெடுப்புக்கு இரண்டாவது காரணமாகும்.

### பலப் பரீட்சை.

அத்துடன் மட்டுமல்ல சர்வதேசியத்துறையில் பாகிஸ்தான் பெரிய சூழ்ச்சிகளுக்கு ஏற்ற தளமாகவும் அமைந்துள்ளது அமெரிக்க செல்வாக்கை அதிகரிக்க பெரோஸ்கான் நூன் அமெரிக்க ஏஜண்டாக உழைக்கிறுர். இன்னெரு பக்கம் மியான் மம்தாஜ் தௌலதானு, நவாப் மாம் தோட், மியான் இப்தி காருதீன், தானியால் லதீபி, போன்ற கம்யூனிஸ்டுகள் பாகிஸ்தானை ரஷ்யாவிடம் ஒப்படைத்துவிட ரஷ்ய ஏஜண்டுகளாக பாடு படுகின்றனர். இந்த இரண்டு கட்சிகளும் பலப் பரீட்சையில் முனைந்திருந்திருக்கின்றன.

பாகிஸ்தான் ஏற்பட்டு அதற்குள்ளேயே அதன் வேர்களை கரையான் அரித்து வருகிறது. பொருளாதார நெருக்கடியால் காரச்சி கார்பொரேஷன் கலைக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்கிறது. "நிவாயே வக்த்" என்ற லாகூர் தினசரியில் பாகிஸ்தான் சர்க்கார் அறிக்கை ஒன்று சமீபத்தில் பிரசுரமாயிற்று அந்த அறிக்கையால் பல விசித்திரமான விஷயங்கள் வெளியாகின்றன. அதை கீழேதருகிறோம்.

### பாகிஸ்தானின் விரோதி யார்?

பாகிஸ்தான் அரசாங்க சம்பளம்பெற்றும் வேலை செய்யாதவன், நேர்மையற்ற முறையில் பணத்தை அதாவது லஞ்சத்தை வாங்கி பாகிஸ்தான் வருமானத்தைக்குறைப்பவன்.

டிக்கட்டின்றி ரயிலில் பிரயாணம் செய்கிறவன்.

துன்பங்களுக்கெல்லாம் காயிதே ஆஜம்தான் பொருப்பு என்று சொல்லிக்கொண்டிருப்பவன்.

பாகிஸ்தான் ஊழல்களை அம்பலப்படுத்துபவன்.

எதிரிகளின் பலத்தைச் சொல்லி பயமும், அவநம்பிக்கையும் உண்டாக்குபவன்.

தன்னுடைய சுற்றத்தார்களையே உத்தியோகங்களில் அமர்த்த முயற்சிப்பவன்.

இம்மாதிரியான பத்து விஷயங்கள் அதில் அடங்கி உள்ளன. இதைப்பார்த்தால் பாகிஸ்தானின் நிலைமையைக் குறித்து ஒரு முடிவுக்கு வருவதில் அதிக கஷ்டம் இருக்க முடியாது. எனவே, இந்த உள்நாட்டுக் குழப்பத்திலிருந்து மக்கள் கவனத்தை திருப்பிவிட காஷ்மீர் படையெடுப்பு உதவியளிக்க முடியுமல்லவா?

பாகிஸ்தானும், மிஸ்டர் ஜின்னுவும் இருக்கும் வரையில் இம்மாதிரியான அதிர்வேட்டுகள் போட்டுக் கொண்டேயிருப்பார். அதனல் இந்திய முஸ்லிம்களின் நிலைமை பாதிக்கப்பட்டுக் கொண்டே இருக்கும். பாகிஸ்தானிகள் எவ்விதத்திலும் இந்திய முஸல்மான்களுக்கு உதவமுடியாது என்பது இன்று வெட்ட வெளிச்சமாகிவிட்டது, நம்மை பாதிக்கக்கூடிய காரியங்களை அவர்கள் செய்து கொண்டேயிருப்பார்கள் என்பதற்கு காரணங்களை இன்னும் எடுத்துக் காட்டவேண்டிய அவசியம் இல்லை. பாகிஸ்தான் ஹிந்துக்களுடன் வம்பு வளர்க்கிறது. அதை அது விடப்போவதில்லை என்பது நிச்சயம். அதற்கு பதில் நடவடிக்கை எடுத்தால் இந்திய முஸல்மான்கள் பாதிக்கப்படுவார்கள். முடிவில் இந்திய முஸ்லிம்கள் அழிய வேண்டியது தான். பாகிஸ்தானில் நடப்பது இந்தியாவிலும் நடக்கிறது என்பதை லீகர்கள் நன்ருய் உணர்ந்து கொள்ள வேண்டும். மகாத்மா காந்தி, பண்டித நேரு ஸர்தார் படேல் இவர்கள் இதை எந்த அளவுக்கு தடுக்க முடியும் என்று தெரியவில்லை. அவர்கள் பேச்சைக் கேட்டு ஹிந்துக்கள் பழிக்குப் பழி மனப் பான்மையை விட்டாலும் அது அதிக நாள் நீடித்திருக்க முடியாது இந்தியாவிலிருந்து கலகங்களை தூண்டிவிட்ட மிஸ்டர் ஜின்னு இன்று பாகிஸ்தானுக்குப் போன பிறகு கலகங்களை தூண்டும் ஆயுதத்தை இன்னும் அதிகக் கூறு தீட்டிக்கொண்டிருக்கிறுர். இங்கு அமைதி ஏற்பட்டு விட்டதைப் பார்த்தவுடன் பாகிஸ்தானில் ஏதாவது

புதிர் ஒன்று போடுவார். மகாத்மாஜி, நேருஜி முதலியோர் நிலைநாட்டிய அமைதி உடனே குலைந்து போகும்.

## பதில் நடவடிக்கை.

வெளியேறும் அகதிகளை பாகிஸ்தான் சோதனை போட ஆரம்பித்தவுடன் அது இந்தியாவிலும் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் பாகிஸ்தானில் துணிமணிகளையும், பெண்களின் நகைகளையும் பறித்துக கொண்டதைப்போல் இந்தியாவில் செய்யப்படவில்லை அவ்வளவுதான் வித்தியாசம். பாகிஸ்தான் ஹிந்து, சீக்கிய பெண்களை சோதனைக்குள்ளாக்கி, இந்திய முஸ்லிம் பெண்களையும் சோதனைக்குள்ளாக்கியிருக்கிறது. இத்துறையில் சில லீகர்களின் போக்கு எல்லா முஸ்லிம்களையும் சந்தேகிக்கும்படி செய்திருக்கிறது. கலீ குஸ்ஸமான் குடும்பத்தைக் கொண்டுபோக பாகிஸ்தானிலிருந்து இரண்டு விமானங்கள் வந்தன. அந்த விமானங்களில் ஜியாஉல் இஸ்லாம் என்ற பேர்வழியும் பெண் வேஷம் போட்டுக்கொண்டு கம்பி நீட்டிவிட்டார். இவர் அலகாபாத் ரீஜனல் கண்ட்ரோலராக இருந்தவர். இவர்மீது பல வியாஜ்ஜியங்கள் நடந்துகொண்டிருந்தன. வாரண்டும் பிறப்பிக்கப்பட்டிருந்தது. ஐக்கிய மாகாண அரசாங்கம் கண்ணியமாக நடந்துகொண்டு கலீகுஸ்ஸமான் வீட்டுப் பெண்களை சோதிக்கவில்லை சர்க்காரின் கண்ணியமான போக்கை தவறான முறையில் பிரயோஜனப் படுத்திக்கொள்ள கலீ குஸ்ஸமான் தயங்கவுமில்லை. இனி கௌரவமான குடும்பப் பெண்களையும் சோதித்துப் பார்க்க ஆரம்பித்தால் அதை எப்படி குறை கூற முடியும்?

## தேசத்துரோகிமீது இரக்கமில்லை.

சில முஸ்லிம்களின் வீடுகளிலிருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்படுகின்றன கலகப் பிரதேசங்களில் அதிலும் முஸ்லிம்களை அழிக்க முயற்சிகள் நடக்கும் இடங்களில் வசிக்கும் முஸ்லிம்களின் வீடுகளிலிருந்து சாதாரண ஆயுதங்கள் கைப்பற்றப்படுவதில் தவறு ஒன்றுமில்லை. அவைத தற்காப்புக்காக வைத்துக் கொண்டிருந்ததாகச் சொன்னால் அதை ஒப்புக் கொள்ள முடியும். ஆனால் ஒவ்வொரு வீட்டிலிருந்து டஜன் கணக்கில் துப்பாக்கிகள், பாம்கள், ஸ்டன் கன், டன் கணக்கில் தோட்டாக்கள், வெடி மருந்து கைப்பற்றப் படுவது தற்காப்புக்காக என்று எப்படிச் சொல்ல முடியும்? இதில் ஏதோ சதி இருக்கிறது என்று நினைக்காமல் இருப்பதற்கில்லை. இம்மாதிரியான பேர்வழிகளுக்கு எத்தனை கடுமையான தண்டனை கொடுத்தாலும் அது குறைவேயாகும் பாமர முஸ்லிம்கள் இம்மாதிரி செய்யவில்லை. ஆயினும் ஓடிப் லீக் லீடர்கள் இக் குற்றத்தை செய்தனர். மிஸ்டர் ஜின்னாவின் ஐந்தாம் படைக்காரர்களான இவர்கள் இந்திய முஸல்மான்களுக்கும், இந்தியாவுக்கும் முதல்தர எதிரிகளாவர். இவர்களால் நிரபராதி முஸ்லிம்களின் வீடுகளும் சோதனைக்கு உள்ளாக நேர்ந்திருக்கிறது. ஐந்தாம்படை முஸ்லிம்களைக் காப்பாற்ற இதர முஸ்லிம்கள் முயற்சிப்பது தவறாகும். அப்படிச் செய்வது சமூகத்திற்கே பெருந்தீங்கு செய்வதாகும். அவர்களைப் பற்றிய தகவல் போலீஸுக்குக் கொடுத்து உடனே பிடித்துக்கொடுத்துவிட வேண்டும். நம் நாட்டின்விரோதி நமக்கும்விரோதி என்பதை மறந்து, தேசத்துரோகிமீது இரக்கம் காட்டுவது மன்னிக்க முடியாத குற்றமாகும்.

## மாறவில்லையேல் மோசமே!

முஸ்லிம்கள் நம்பிக்கையிழந்து அதனால் சகல வசதிகளையும் இழந்துவருகின்றனர். உத்தியோகங்கள், சொத்து, சுகம், உயிர் எல்லாவற்றையும்விட கௌரவமும் போய்க்கொண்டிருக்கிறது. கௌரவம் போனபிறகு என்னதான் இருந்தும் பலன் என்ன? இந்திய முஸல்மான்கள் நாலரை கோடி பேரும் எந்நிலையில் வாழப்போகின்றார்கள் என்பது தெரியவில்லை உருதுவின் உறைவிடமான யு. பி. யில் ஹிந்தி அரசாங்க பாஷையாகிவிட்டது. தர்காக்களும், நம் மூதாதைகளின் கடந்தகால ஞாபகச்சின்னங்களும் மறைந்துவருகின்றன. இந்திய முஸல்மான்கள் விழிப்படைந்து சீக்கிரமே தங்கள் போக்கை மாற்றிக் கொள்ளாமல் இனியும் ஹிந்து மகா சபை போன்ற வகுப்புவாத ஸ்தாபனங்கள் வளருவதற்கு சந்தர்ப்பம் கொடுத்து வந்தால், ஹிமாலயத்திலிருந்து குமரிவரையில் இஸ்லாமின் பெயரை சொல்லுவதற்குக்கூட ஒரு முஸ்லீமையும் பார்க்கமுடியாத நாள் வெகு தொலைவில் இல்லையென்பது நிச்சயம். இவ்விஷயங்களைக் கண்டித்து சர்க்காருடன் நாம் ஏன் போராடக் கூடாது என்று சிலர் கேட்கலாம் கடந்த பத்து வருஷகாலமாக சண்டைபோட்டதின் பலனை இன்று நாம் பிரத்யக்ஷமாகப் பார்க்கின்றோம். இன்னும் சண்டைபோட்டு என்ன சாதிக்க முடியும்? வியாதிக்கு சிகிச்சை செய்யவேண்டுமேயொழிய வியாதியின் அறிகுறிகளுக்கல்ல முஸ்லிம்கள் பாகிஸ்தான் அனுதாபத்தைவிட்டு தங்கள் முழு கவனத்தையும், இந்தியாவில் செலுத்துவது ஒன்றுதான் சரியானப் பரிகாரம் அதன் பிறகு நாளாவட்டத்தில் சகல பிரச்னைகளும் தானாகவே தீர்ந்துவிடமுடியும். ஹிந்துக்களை விரோதிகள் என்று எண்ணியிருக்கும் வரையில் அவர்களோ, அவர்களுடைய செய்கைகளோ திருப்தியளிக்கக்கூடியவைகளாக நமக்குத் தோன்றுவது சாத்தியமில்லை. தவிர, விரோதிகளிடம் நன்மையை எதிர்பார்ப்பதும் முட்டாள்தனமாகும். ஆகையால் முதலாவதாக முஸ்லிம்களின் மூளையிலிருந்து பாகிஸ்.

தான் விஷம் நீக்கப்படவேண்டியதவசியம். அது ஒன்றே சகல தொல்லைகளுக்கும் மூலகாரணம். முஸ்லிம்கள் போக்கில் மாறுதல் ஏற்பட்ட பிறகும் முஸ்லிம்களை இந்தியாவைவிட்டு வெளியேற்ற முயற்சிக்கவோ, வம்பு வளர்க்கவோ ஹிந்துக்களுக்கு ஒன்றும் பைத்தியம் பிடித்துவிடவில்லை.

மாறுதல் ஏற்படாதவரையில் முஸ்லிம்களுடைய நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக்கொண்டே போகும். தங்கள் போக்கை முஸ்லிம்கள் உடனடியாக மாற்றிக்கோள்ளவேண்டும். இதை நாம் அடிக்கடி சொல்லிவந்துள்ளோம். பிரிவினைக்கு முன் பாகிஸ்தான் ஸ்வர்க்கக் கனவிலே லயித்திருந்த முஸ்லீம்கள் பிரிவினைக்குப் பிறகு நரக வேதனை அனுபவித்துக்கொண்டிருக்கிருர்களே ஒழிய இன்னும் விழிப்படைந்துவிட்டதாக நம்புவதற்கில்லை. லீக் லீடர்களை உதறித்தள்ளிவிட்டு பாமர முஸ்லிம் பொது மக்கள் திருந்தவில்லையானல் காங்கிரஸ் முஸ்லிம்களும் கூட அவர்களைப் பாதுகாக்க முடியாமல் போய்விடலாம். வகுப்பு வாதத்தை இறுக அணைத்துக்கொண்டிருப்பவர்களை காப்பாற்றுவது சாத்தியமே அல்ல. காப்பாற்ற வேண்டுமானல் வகுப்பு வாதத்தை விட்டு அவர்கள் தேசீய வாதிகளாகவேண்டும். இந்தியாவில் இந்தியாவின் எதிரிகள் இருந்துவர எப்படி முடியும்? இந்திய எதிரிகள்மீது நமக்கு எவ்வித அனுதாபமும் கிடையாது. லீக் லீடர்களுக்கு மன மாறுதல் ஏற்படவில்லை என்பது உண்மை. லீக் லீடர்களும், லீக் பிரஸ்ஸும் ஐந்தாம்படை வேலை செய்து வருவதை இந்தியர்கள் உணராமல் இல்லை. இந்திய விசுவாச வேஷத்தில் பாகிஸ்தானிடம் அனுதாபமும், இந்தியாவிடம் வெறுப்பும் அவர்கள் கொண்டிருக்கின்றனர்.

## வெளியேற்றுங்கள் !

கொள்ளையடிக்கக் காஷ்மீரில் புகுந்த கொள்ளைக்காரர்களுக்கு லீக் லீடர்களின் அனுதாபம் இருந்து வருகிறது. அதாவது காஷ்மீர் போர் அரங்கத்தில் இந்திய வீரர்கள் சுட்டுத்தள்ளிக்கொண்டிருக்கும் அதே கூட்டத்தைச் சோந்தவர்கள் நம்மிடையேயும் இருந்துவருகின்றனர் என்பதுதான் அதன் அர்த்தம். இம்மாதிரியானவர்கள் உடனே பாகிஸ்தானுக்குப் போய்விடவேண்டும். அல்லது நெட்டித்தள்ளி அவர்களை பாகிஸ்தானுக்கு அனுப்பியாக வேண்டும். மௌலான அபுல் கலாம் ஆஸாத் கூட்டிய மகாநாட்டில் கலந்துகொள்ளவேண்டாமென்று லீகர்களைத் தடுத்தவர்கள் இந்திய விசுவாசக் கூச்சல் போடுவது உண்மையென்று இந்தியர்கள் எப்படி நம்ப முடியும்? சகல துன்பங்களுக்கும் காரணமான முஸ்லிம் லீகை இனியும் சகித்துக்கொண்டிருப்பதற்கில்லை அரசியல் நிர்ணய சபையிலிருந்தும், மாகாண சட்டசபைகளிலிருந்தும் லீக் அங்கத்தினர்கள் ராஜீநாமா செய்து கௌரவமாக வெளியேறவேண்டும். அப்படிச் செய்யத் தவறினல் சட்ட சபைகளுக்குள் அவர்கள் நுழைய முடியாமல் உடனே சத்யாக்ரஹம் ஆரம்பிக்கப்படவேண்டும். இதுவரையில் அவர்கள் அங்கிருந்துகொண்டு ஒன்றும் சாதித்துவிடவில்லை. இனி ஒன்றும் சாதிக்கப்போவதுமில்லை அவர்கள் அங்கு உட்கார்ந்துகொண்டிருப்பதால் முஸ்லிம்களுக்கு நஷ்டமே ஏற்படுகின்றது. சட்ட சபையில் ஹிந்துக்கள் கொண்டுவரும் எந்த தீர்மானத்தையும், எதிர்ப்பதே அவர்களுக்கு வேலை. ஹிந்துக்கள் செய்வதை எதிர்க்கவேண்டுமென்ற ஒரே எண்ணத்தைத் தவிர வேறு ஒன்றுமே அவர்களுக்கு தெரியாது. ஆகையால் அவர்களுடைய ஆட்சேபனைகளுக்கு இம்மியளவும் மதிப்பில்லாமல் போய்விட்டது. சட்டசபைகளும் அவர்கள்கொண்டுவரும் தீர்மானங்களை தோற்கடிப்பதென்று கங்கணம் கட்டிவிட்டதாகத் தோன்றுகிறது. அவர்களால் முஸ்லிம்களுக்கு நடக்கும் காரியங்களும் கெட்டுவிடுகின்றன. ஐக்கிய மாகாண சட்டசபையில் ஒரு காங்கிரஸ் அங்கத்தினர், லீக் அங்கத்தினர்களைப்பார்த்து நீங்கள் பாகிஸ்தானுக்குப் போய்விடுங்கள் என்ருர். அதற்கு நாம் இங்கேயே பாகிஸ்தான் அமைப்போம் என்று லீகர்கள் பதில் அளித்தனர். இந்த பதில் அவர்களுடைய மனப்பான்மையை சந்தேகமற தெரிவிக்கின்றது. இதனல் முஸ்லிம்களின் நிலைமை இன்னும் பலஹீனமே அடைய முடியும். இந்தியாவை பாகிஸ்தானக்க எண்ணுகிறவர்கள் நிச்சயமாக இந்திய விரோதிகளே. இந்தியர்கள் அவர்களை எவ்விதத்திலும் நம்ப முடியாது.எனவே லீக்லீடர்களை வெளியேற்றி காங்கிரஸ் முஸ்லிம்களை சட்ட சபைகளுக்குள் தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டியது முஸ்லிம் பொது மக்களின் கடமையாகும். அவர்களை பாகிஸ்தானுக்கு போங்கள் என்று யாரும் சொல்லவோ, அவ நம்பிக்கைகொள்ளவோ முடியாது.

## ஐக்கியத்தால் நன்மைகள்.

பொதுவாக தங்கள் எல்லா நடவடிக்கைகளையும், போக்கையும், முஸ்லிம்கள் மாற்றிக்கொள்ளவேண்டியது அவசியம். பாகிஸ்தான் வேண்டுமென்று கோஷித்த முஸ்லிம்கள் ஐக்கிய இந்தியா வேண்டுமென்ற கோஷத்தை இனி கோஷிக்கவேண்டும். எது வரையில் பாகிஸ்தான் இருந்து வருமோ அதுவரையில் இந்திய முஸல்மான்கள்மீது நம்பிக்கை ஏற்பட முடியாது. நாலரை கோடி முஸ்லிம்கள் கௌரவமாக வாழ்ந்து தலைநிமிர்ந்து நிற்க வேண்டுமென்ருல் இந்தியாவையும், பாகிஸ்தானையும் ஐக்கியப்படுத்தியே யாக வேண்டும். இந்திய பாகிஸ்தான் ஐக்கியத்தினல் அடியில் கண்ட நன்மைகள் ஏற்பட முடியும். (தொடரும்)

Printed by V. JAYARAM at his Sri Rama Printing Works, 129, Kadalangudi E St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.